بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 9

இதழ் 3&4

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரி கமரி 1446 ரஜப் 15-22 ★ ஹிஜ்ரி ஷம்ஸி 1404 - ஸுல்ஹ் 16 - 23 ★ 16 - 23 ஜனவரி 2025

## அல்லாஹ்வின் கட்டளை

يَاۤ اَيُّهَا النَّاسُ اعۡبُدُوۡا رَبَّكُمُ الَّذِىۡ خَلَقَكُمۡ وَالَّذِيۡنَ مِنۡ قَبۡلِكُمۡ لَعَلَّكُمۡ تَتَّقُوۡنَ

பொருள்:
மக்களே! நீங்கள் உங்களையும், உங்களுக்கு முன்னிருந்தோரையும் படைத்த உங்களுடைய இறைவனை மட்டும் வணங்குங்கள். அதனால் நீங்கள் எல்லாவித ஆபத்துகளிலிருந்தும் தவிர்ந்து கொள்ளலாம்

(அல்பக்கரா: 22)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## அஹ்மதிய்யத்தின் தலைமையகம் காதியான் தாருல் அமானில் நடைபெற்ற வெற்றிகரமான மற்றும் அருளுக்குரிய 129-வது ஆண்டு மாநாடு

## ஸய்யிதுனா ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இஸ்லாமாபாத் யூ.கேவிலிருந்து அருளுக்குரிய MTA மூலமாக நிறைவுரை நிகழ்த்தினார்கள்

அல்ஹம்துலில்லாஹ்! 129- வது காதியான் ஆண்டு மாநாடு 2024 -ம் ஆண்டு டிசம்பர் 27,28,29 ஆகிய தேதிகளில் ஜுமுஆ, சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் சீருடனும், சிறப்படனும் நடந்து முடிந்தது. நாட்டின் தொலை தூரப் பகுதிகளில் இருந்து அஹ்மதிய்யத்தின் நேசர்கள் மிகவும் ஆர்வத்துடனும் உத்வேகத்துடனும், உற்சாகத்துடனும் ஜல்ஸாவில் கலந்து கொள்ளும் நோக்கத்துடன் காதியானிற்கு வருகை தர துவங்கினார்கள். மேலும், ஜல்ஸாவின் நாட்கள் நெருங்க, நெருங்க காதியான் தாருல் அமான் நகரத்தின் பொலிவும் அதிகரித்துக் கொண்டே சென்றது. எந்த அளவுக்கு என்றால், காதியான் முழுமையாக விருந்தினர்களால் நிறைந்து விட்டது. எங்கு சென்றாலும், எங்கு பார்த்தாலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்தினர்களே தென்பட்டனர். வெளிநாடுகளில் இருந்தும் கூட ஒரு பெரும் எண்ணிக்கையில் அஹ்மதிய்யத்தின் நேசர்கள் ஜல்ஸாவில் கலந்து கொண்டனர். காதியான் தாருல் அமான் எனும் நேசத்திற்குரிய நகரம் ஒருமுறை மீண்டும் மகிழ்ச்சிகளாலும், பொலிவுகளாலும் நிறைந்த விட்டது. விருந்தினர்கள் வருகை தருவதற்கு முன்னரே மின்சாரத் துறை சார்பாக முஹல்லாவின் அனைத்து வீதிகளிலும், சாலைகளிலும் டியூப் லைட்கள் மூலமாக ஒளிமயமாக்கி இருந்தது. பஹிஷ்தி மக்பரா, தாருல் மஸீஹ், மஸ்ஜித் முபாரக், மஸ்ஜித் அக்ஸா, மினாரத்துல் மஸீஹ், போன்றவை சிறிய, சிறிய மின்சார அலங்கார விளக்குகளால் மணப்பெண்ணைப் போன்று அலங்கரிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த ஆன்மிக நகரம் தனது மறைமுகமான ஒளியுடன் வெளிப்படையாகவும் ஒளிமயமாக காட்சியளித்துக் கொண்டிருந்தது.

### டிசம்பர் 27, 2024 ஜுமுஆ நாள்
### துவக்க அமர்வு

அல்லாஹ்வின் எல்லையற்ற அருளினாலும், கருணையினாலும் டிசம்பர் மாதம் 27-ம் தேதி அருளுக்குரிய ஜுமுஆ நாளன்று 129-வது காதியான் ஜல்ஸா ஸாலானா ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் பிரதிநிதியும், ஸதர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் தலைவருமான மதிப்பிற்குரிய மவ்லானா கரீமுத்தீன் ஸாஹிப் ஷாஹித் அவர்களின் தலைமையில் முழுப் பொலிவுடனும், மகிமையுடனும் நமது ஜமாஅத்தின் மரபுகளுக்கேற்ப சரியாக காலை 10.57 மணியளவில் துவங்கியது. மழை மற்றும் மோசமான காலநிலையின் காரணமாக ஜல்ஸா திடல் புஸ்தானே அஹ்மதிற்கு பகரமாக மஸ்ஜித் அக்ஸாவில் வைத்து ஜல்ஸாவின் துவக்க அமர்வு ஆரம்பமானது. மஸ்ஜித் அக்ஸாவின் பழைய மற்றும் புதிய பகுதியில் ஆண்கள் ஜல்ஸாவை காண்பதற்கும், கேட்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதேநேரம் பெண்களுக்கு மஸ்ஜித் அன்வாரில் லைவ் ஸ்டீரிமிங் மூலமாக ஜல்ஸா நிகழ்ச்சிகளின் ஆடியோக்களை கேட்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. திடீர் மழையின் காரணமாக நிர்வாகம் சுமார் ஒரு மணிநேரத்திற்குள் ஸ்டேஜ் மற்றும் லைவ் ஸ்டீரீமிங் உட்பட அனைத்து ஏற்பாடுகளையும் முழுமை செய்து விட்டது. மேலும் கூட்டத்தின் தலைவரின் அனுமதியுடன் காதியான் ஆண்டு மாநாட்டின் முதல் அமர்வின் துவக்கம் திருக்குர்ஆன் திலாவத்துடன் ஆரம்பமானது. மதிப்பிற்குரிய தாரிக் அஹ்மத் லோன் ஸாஹிப் அவர்கள் சூரா மூஃமினுடைய 61 முதல் 66 வரையிலான வசனங்களை திலாவத் செய்தார்கள்.பின்னர் மதிப்பிற்குரிய ஜாவீத் அஹ்மத் லோன் ஸாஹிப் அவர்கள் அதன் மொழியாக்கத்தை தஃப்ஸீரே ஸகீரிலிருந்து எடுத்துரைத்தார்கள். அதன் பிறகு கூட்டத்தின் தலைவர் அவர்கள் ஜல்ஸாவில் கலந்து கொண்டிருந்த அனைவருக்கும் ஜல்ஸாவில் கலந்து கொண்டதற்கான வாழ்த்துகளை தெரிவித்தார்கள். மேலும், அன்னார் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேற்கோள்களின் ஒளியில் ஜல்ஸாவில் கலந்து கொண்டவர்களுக்கு சில அறிவுரைகளை வழங்கினார்கள். கூட்டத்தின் தலைவர் அவர்கள் தமது துவக்க உரையின் இறுதியில் கூட்டுத் துஆ செய்தார்கள்.

### முதல் நாள் முதல் அமர்வு

கூட்டத்தின் தலைவரின் துவக்கவுரை மற்றும் துஆவிற்குப் பிறகு மதிப்பிற்குரிய நஸ்ருமினல்லாஹ் ஸாஹிப், நாயிப் நாஸிர் உமூரே ஆமா காதியான் அவர்கள் அழகிய குரலில் மேரே மவ்லா மேரி இக் துஆ ஹே என்ற ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் கவிதை வரிகளை பாடலாக பாடினார்கள். இறையிருப்பு மற்றும் துஆக்களை நன்கு கேட்பவன் என்ற அல்லாஹ்வின் பண்பு என்ற தலைப்பில் மதிப்பிற்குரிய மவ்லானா ஹமீது கவ்ஸர் ஸாஹிப், நாஸிர் தஃவத்தே இலல்லாஹ் மர்கஸிய்யா காதியான் அவர்கள் இந்த அமர்வின் முதல் சொற்பொழிவை நிகழ்த்தினார்கள். இந்த அமர்வின் இரண்டாவது சொற்பொழிவை, மதிப்பிற்குரிய மவ்லானா அதாவுல் முஜீப் லோன் ஸாஹிப், பிரின்ஸிபல் ஜாமிஆ அஹ்மதிய்யா காதியான் அவர்கள் நிகழ்த்தினார்கள். இஸ்லாமிய மரியாதைகள் மற்றும் நல்லொழுக்கங்கள், உண்ணல் மற்றும் பருகுதலின் மரியாதைகள், சுத்தமாக இருத்தல், வழிப்பாதைகளுக்குரிய உரிமைகள், பார்வையை தாழ்த்தி வைத்தல், சபைகளின் ஒழுங்குகள் என்ற தலைப்பில் நிகழ்த்தினார்கள்.

### முதல் நாள்-இரண்டாம் அமர்வு

காதியான் ஆண்டு மாநாடு-2024 முதல் நாளின் இரண்டாம் அமர்வு சரியாக பிற்பகல் 2.30 மணியளவில் ஆரம்பமானது. இந்த அமர்வு மதிப்பிற்குரிய மவ்லானா ஹமீது கவ்ஸர் ஸாஹிப், நாஸிர் தஃவத்தே இலல்லாஹ் மர்கஸிய்யா காதியான் அவர்களின் தலைமையில் துவங்கியது. மேலும், மரபுகளுக்கேற்ப திருக்குர்ஆன் திலாவத்துடன் நிகழ்ச்சி ஆரம்பமானது. அன்பிற்குரிய முஹம்மத் இப்ராஹீம்,

இதன் தொடர்ச்சி 8-ம் பக்கம்...

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

## ஹுதைபியா உடன்படிக்கையின் நிலைமைகளும் & சம்பவங்களும்

ஹுதைபியா சமரச உடன்படிக்கை செய்யப்பட்டதும், மக்கள் ஒருவர் மற்றவரை சந்தித்துக் கொண்டார்கள். இணை வைப்பாளர்கள் மதீனாவுக்கு வந்தார்கள். முஸ்லிம்கள் மக்காவுக்குச் சென்றார்கள். அவர்கள் தம் வீட்டு மக்கள், நண்பர்கள் மற்றும் நலம் விரும்பிகளைச் சந்தித்தார்கள். அவர்களிடமிருந்து கண்ணியத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்களின் வழிகாட்டல்கள் மற்றும் அற்புதங்கள் பற்றி கேட்டறிந்தார்கள். நபித்துவத்தின் அடையாளங்களை அறிந்தார்கள். அன்னாருடைய அழகிய வாழ்க்கை வரலாறு மற்றும் அழகிய முன்மாதிரியைப் பற்றித் தெரிந்து கொண்டார்கள். பல விஷயங்களைக் கண்களால் கண்டார்கள். அவர்களது உள்ளங்கள் ஈமான் பக்கம் சாய்ந்தன. எதுவரை என்றால், பல மக்கள் ஈமான் கொள்வதில் விரைந்தார்கள். ஹுதைபியா சமரச உடன்படிக்கைக்கும் மக்கா வெற்றிக்கும் நடுவில் இஸ்லாத்தை ஏற்றார்கள். மற்றவர்களுக்கு இஸ்லாத்தின் பக்கம் ஆர்வம் பிறந்து விட்டிருந்தது. எதுவரை என்றால், (மக்கா வெற்றி) அன்று அனைவரும் ஈமான் கொண்டார்கள்

அன்னார் (ஸல்) கூறினார்கள்: நமக்கு எதிராக போர்க் களத்தில் இறங்கியிருந்த குறைஷியர்கள் சுயமே போரை கைவிட்டு விட்டு அமைதிக்கான உடன்படிக்கை செய்து கொண்டார்கள். மேலும், அடுத்த ஆண்டு நமக்காக மக்காவின் கதவுகளைத் திறந்து விடுவதற்கான வாக்குறுதியளித்துள்ளார்கள். நாம் அமைதியுடனும், நிம்மதியாகவும் மக்கத்தினரின் குழப்பமூட்டுதலிலிருந்து பாதுகாப்பாக இருந்த வண்ணம் எதிர்கால வெற்றிகளின் நறுமணத்தை நுகர்ந்தவாறு திரும்பிச் செல்கிறோம். எனவே நிச்சயமாக இதுவொரு மகத்துவ மிக்க வெற்றியாகும்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 29 நவம்பர் 2024** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1403 ஆண்டு **நுபுவ்வத்** மாதம் **29ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

ஹுதைபியா சமாதான உடன்படிக்கை நிகழ்வு பற்றிக் கூறப்பட்டு வருகிறது. இதன் மேற்கொண்ட விபரத்தை எடுத்துரைப்பேன். இந்தத் தருணத்தில், ஸஹாபாவுக்குக் காவல் பணி ஒப்படைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக இவ்வாறு கூறப்படுகிறது: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தம் ஸஹாபிக்களுக்கு இரவு நேரத்தில் காவல் காக்குமாறு கட்டளையிட்டிருந்தார்கள். தினமும் காவல் காக்கப்பட்டு வந்தது. மூன்று பேர் மாற்றி மாற்றி காவல் காத்து வந்தார்கள். அவர்களில் ஹஸ்ரத் அவ்ஸ் பின் ஃஹவ்லீ, அப்பாத் பின் பிஷ்ர் மற்றும் முஹம்மத் பின் மஸ்லமா ஆகியோர் இருந்தார்கள்.

ஓரிரவு ஹஸ்ரத் முஹம்மத் பின் மஸ்லமா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குக் காவலாக நியமிக்கப்பட்டிருந்தார்கள். அப்பொழுது குறைஷியர்கள் மிக்ரஸ் பின் ஹஃப்ஸின் கண்காணிப்பில் 50 பேரை அனுப்பினர். மேலும், முஸ்லிம்களில் எவரையாவது கொலை செய்ய வேண்டும் அல்லது திடீரென்று அவர்களுக்கு ஏதாவது இழப்பு ஏற்படுவதை எதிர்பார்த்த வண்ணம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சுற்றிவாருங்கள் என்று அவர்களுக்கு கட்டளையிட்டிருந்தார்கள். ஹஸ்ரத் முஹம்மத் பின் மஸ்லமா (ரலி) அவர்கள், அவர்களைப் பிடித்து விட்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் கொண்டு சென்றார்கள். மிக்ரஸ் ஓடி விட்டான். அவன் தன் கூட்டாளிகளை எச்சரித்து விட்டான். இதனால் மிக்ரஸ் ஏமாற்றும் மனிதன் ஆவான் என்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அந்தக் கூற்றும் வெளிப்பட்டு விட்டது. இது பற்றி கடந்த குத்பாவில் கூறப்பட்டிருந்தது.

முஸ்லிம்களில் சிலர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அனுமதியுடன் மக்காவில் நுழைந்ததாகவும் கூறப்படுகிறது. அவர்களில் குர்ஸ் பின் ஜாபிர் ஃபெஹ்ரீ, அப்துல்லாஹ் பின் சுஹைல், அப்துல்லாஹ் பின் ஹுஸைஃபா ஸெஹ்மீ, அபூரூம் பின் உமைர், அப்தரீ ஐயாஷ் பின் அபீ ரபிஆ, ஹிஷாம் பின் ஆஸ், அபூ ஹாத்திப் பின் அம்ர், உமைர் பின் வஹப், ஹாத்திப் பின் அபீ பல்தஆ மற்றும் அப்துல்லாஹ் உமையா ஆகியோர் இருந்தார்கள். இவர்கள் எல்லாரும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் பாதுகாப்பில் மக்காவில் நுழைந்தார்கள். ஒளிந்தவாறு நுழைந்தார்கள் என்றும் கூறப்படுகிறது. பல்வேறு அறிவிப்புகள் உள்ளன.

இந்த முஸ்லிம்களைப் பற்றி குறைஷியர்களுக்குத் தெரிய வந்ததும், அவர்கள் இவர்களைப் பிடித்துக் கொண்டார்கள். அதாவது குறைஷியர்கள் இவர்களைப் பிடித்துக் கொண்டார்கள். குறைஷியர்களுக்குத் தங்களுடைய கூட்டாளிகள் பிடிபட்ட செய்தியும் கிடைத்து விட்டது. அவர்களை ஹஸ்ரத் முஹம்மத் பின் மஸ்லமா (ரலி) அவர்கள் பிடித்து வைத்திருந்தார்கள். தங்களுடைய 50 பேர் முஸ்லிம்களின் கைதிகள் ஆகிவிட்டனர் என்ற செய்தி குறைஷியர்களுக்கு கிடைத்ததும், பிறகு குறைஷியர்களின் ஆயுதம் ஏந்திய இன்னொரு படை ஹஸ்ரத் நபிகள் (ஸல்) அவர்கள் மற்றும் அன்னாருடைய ஸஹாபிகளை நோக்கி சென்று, முஸ்லிம்கள் மீது தாக்குதல் தொடுத்து விட்டது.

அவர்கள் அம்புகளையும், கற்களையும் எறிய ஆரம்பித்தனர். இணை வைப்பாளர்களின் 12 குதிரை வீரர்களை முஸ்லிம்கள் பிடித்து விட்டார்கள். முஸ்லிம்களில் ஹஸ்ரத் இப்னு ஸுனைம் ஷஹீது ஆகிவிட்டார்கள். குறைஷியர்கள் அவர்களை அம்பெறிந்து கொன்று விட்டிருந்தார்கள். பிறகு, குறைஷியர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் ஒரு கூட்டத்தை அனுப்பினார்கள். அவர்களில் ஸுஹைல் பின் அம்ர் என்பவரும் இருந்தார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தொலைவிலிருந்து அவரைக் கண்டதுமே, ஸஹாபிகளிடம், ஸுஹைல் மூலமாக உங்கள் விவகாரம் ஸஹ்ல் அதாவது எளிமையாகி விட்டது என்று கூறினார்கள்.

அப்பொழுது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் ஸுஹைல் வந்து சேர்ந்து, உங்களுடைய தோழர்கள் அதாவது, உஸ்மான் (ரலி) அவர்கள் மற்றும் மற்ற ஸஹாபிகள் 10 பேரை சிறைபிடித்ததிலும், எங்களுடைய மக்கள் சிலர் உங்களுடன் சண்டையிட்ட விஷயத்திலும் எங்களுடைய கருத்துக் கூறும் மனிதர் எவரும் இணைந்திருக்கவில்லை. எங்களுக்கு இது பற்றித் தெரிய வந்தபோது, நாங்கள் இதை மிகவும் வெறுத்தோம். எங்களுக்கு இது பற்றி எதுவும் தெரியாது. அது எங்களில் சீர்கெட்ட மக்களின் வேலையாக இருந்தது. எனவே இரண்டு தடவையில் நீங்கள் பிடித்துள்ள எங்களுடைய ஆட்களை எங்களிடம் திருப்பி அனுப்பி விடுங்கள் என்று கூறினார். அதற்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், நீ என் தோழர்களை விட்டு விடாத வரை நான் அவர்களை அனுப்ப மாட்டேன் என்று கூறினார்கள். இதனால் அவர்கள் எல்லாரும், சரி; நாங்கள் அவர்களை விட்டு விடுகிறோம் என்று கூறினார்கள். இதனால் குறைஷியர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களையும் மற்ற 10 ஸஹாபிகளையும் திருப்பி அனுப்பி விட்டார்கள். அப்பொழுது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களும் அந்த ஆட்களை விட்டு விட்டார்கள்.

இப்பொழுது கூறப்பட்டது போன்று -

இதற்கு முன்னரும், கடந்த குத்பாவிலும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் தொடர்பாக நான் இதைக் கூறி விட்டேன். அதாவது, காஃபிர்கள் அவர்களைப் பிடித்துக் கொண்டார்கள். இந்த செய்தி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைச் சென்றடைந்ததும், ஹஸ்ரத் ரஸூலுல்லலாஹ் (ஸல்) அவர்கள் ஸஹாபிகளிடம் ஒரு பைஅத் வாங்கினார்கள். ஓர் உறுதிமொழி வாங்கினார்கள். அதை பைஅத்துர் ரிஸ்வான் என்பார்கள். இதன் விபரம் பின்வருமாறு: குறைஷியர்களுக்கு ஹுதைபியாவின் இந்த பைஅத்தின் நிலை பற்றி தெரிய வந்தபோது, அவர்கள் மிகவும் அச்சத்திற்குள்ளானார்கள். இந்த பைஅத் நடந்து விட்டது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் முஸ்லிம்கள் அனைவரிடமும் ஓர் உறுதிமொழி வாங்கியுள்ளார்கள் என்பது அவர்களுக்கும் தெரிந்து விட்டது. அவர்களுடைய கருத்துக்கூறும் மக்கள் இவ்வாறு ஆலோசனை கூறினார்கள்: சமரசம் செய்து கொள்வது பொருத்தமாக இருக்கும். அதாவது இந்த ஆண்டு இப்படி சமரசம் செய்து கொள்ள வேண்டும்; இந்த ஆண்டு நீங்கள் திரும்பி செல்லுங்கள். அடுத்த ஆண்டு வந்து மூன்று நாட்கள் மக்காவில் தங்கலாம். ஆனால், உங்களிடம் பயண விலங்கில் வரும் ஒருவருக்கான, பயண விலங்கில் வரும் ஒரு நபருக்கான அவசியமான ஆயுதங்கள், அதாவது உறைகளில் உள்ள வாள் மற்றும் அம்புக் கூடுகள் மட்டுமே இருக்க வேண்டும். அதைத் தவிர வேறு எதுவும் இருக்கக் கூடாது.

இந்த ஆலோசனைக்குப் பிறகு குறைஷியர்கள் இரண்டாவது முறை ஸுஹைல் பின் அம்ரை அனுப்பினார்கள். அவருடன் மிக்ரஸ் பின் ஹஃப்ஸ் மற்றும் ஹுவைத்தப் பின் அப்தில் உஸ்ஸா ஆகியோரும் இருந்தார்கள். இந்த மக்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் இந்த ஆலோசனையைக் கொண்டு வந்தார்கள்; அதாவது இந்த ஆண்டோ நீங்கள் உம்ரா செய்யாமலேயே திரும்பிச் சென்று விடுங்கள். அப்போதுதான், நீங்கள் உங்களது ஆற்றலால் குறைஷியர்களின் விருப்பத்துக்கு எதிராக மக்காவில் நுழைந்து விட்டீர்களென அரேபியர்கள் எவரும் கூறமாட்டார்கள். அடுத்த ஆண்டு உம்ராவுக்காக மீண்டும் வந்து விடுங்கள்; ஆக, ஸுஹைல் முன்னால் வந்தபோது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தொலைவில் இருந்து அவரைப் பார்த்து விட்டு இவ்வாறு கூறினார்கள்: இவரை மீண்டும் அனுப்பியதன் பொருள், குறைஷியர்கள் சமரசம் செய்து கொள்ள எண்ணியுள்ளார்கள் என்பதாகும். ஹுதைபியா தருணத்தில் நடந்த சமரசம் தொடர்பாக ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

ஸுஹைல் பின் அம்ர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு முன்னால் வந்ததும், அன்னார்(ஸல்) அவரைப் பார்த்ததுமே இவ்வாறு கூறினார்கள்; இவர் ஸுஹைல் ஆவார்; இப்பொழுது இறைவன் நாடினால் விவகாரம் ஸஹ்ல் (எளிது) ஆகிவிடும். (அதாவது) எளிமையாகி விடும். எவ்வாறு இருப்பினும், ஸுஹைல் வந்தார். வந்த உடனேயே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், வாருங்கள், இப்பொழுது நீண்ட வாதத்தை விட்டுவிடுங்கள். நாங்கள் உன்படிக்கைக்கு ஆயத்தமாக உள்ளோம் என்று கூறினார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நாங்களும் ஆயத்தமாக உள்ளோம் என்று கூறினார்கள். இவ்வாறு உரைத்தவாறு, அன்னார் தம் செயலாளரை, அதாவது ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை வரவழைத்தார்கள்.

நிபந்தனைகள் பற்றி ஒரு பொதுவான விவாதம் ஏற்கனவே நடைபெற்று விட்டிருந்தது. விபரங்கள் உடனுக்குடன் முடிவாக இருந்தது. எனவே எழுத்தாளர் வந்த உடனேயே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எழுதுவீராக என்று கூறினார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம், எழுவீராக என்று கூறினார்கள். ஹுஸூர் (ஸல்) அவர்கள் தாமே எழுத வைக்கத் துவங்கினார்கள். அப்போது பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் என்பதிலிருந்து துவங்கினார்கள். ஸுஹைல் சமரசம் செய்து கொள்வதற்கோ ஆயத்தமாக இருந்தார் தான். ஆயினும், குறைஷியர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும், மக்கத்தினரின் கண்ணியத்திற்காகவும் மிகவும் விழிப்புடன் இருக்க விரும்பியிருந்தார்.

அவர் உடனடியாக இந்த ரஹ்மான் எனும் சொல் எப்படி? எங்களுக்கு அவனைத் தெரியாது; எப்பொழுதும் அரேபிய மக்கள் எப்படி எழுதி வருகிறார்களோ அதேபோன்று எழுதுங்கள். அதாவது பிஸ்மிக்கல்லாஹும்ம (என்று எழுதுங்கள்); பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் என்று எழுதக் கூடாது. மாறாக, பிஸ்மிக்கல்லாஹும்ம என்று எழுதுங்கள் என்று கூறினார். மறுபக்கம் முஸ்லிம்களுக்கும் சமுதாயத்தின் கண்ணியம் மற்றும் மார்க்கத்தின் தன்மானம் பற்றிய விஷயம் இருந்தது. அவர்களும் அந்த மாற்றத்தினால் உடனடியாக அதிர்ச்சியடைந்தனர். அவர்கள் நாங்களோ கண்டிப்பாக பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் என்றே எழுதுவோம் என்று கூறினார்கள். ஆனால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், இல்லை இதில் எந்த தவறும் இல்லை. ஸுஹைல் கூறுவது போன்று எழுதிக் கொள்ளுங்கள் என்று கூறி முஸ்லிம்களை அமைதியாக்கி விட்டார்கள். எனவே பிஸ்மிக்கல்லாஹும்ம என்ற சொற்கள் எழுதப்பட்டன. இதற்குப் பிறகு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எழுதுங்கள். இது முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் செய்து கொண்ட உடன்படிக்கை ஆகும். ஸுஹைல் மீண்டும் தடுத்து, இந்த ரஸூலுல்லாஹ் என்ற சொல்லை நாங்கள் எழுத மாட்டோம். நீங்கள் அல்லாஹ்வின் தூதர் என்ற விஷயத்தை நாங்கள் ஏற்றுக கொண்டால், பிறகோ இந்த சண்டைகள் எல்லாமே முடிந்து போய் விடுகிறது. உங்களைத் தடுப்பதற்கும், உங்களை எதிர்ப்பதற்கும் எங்களுக்கு எந்த உரிமையும் இருக்காது. எனவே, எங்கள் பகுதியில் உள்ள வழிமுறை போன்று, முஹம்மத் பின் அப்தில்லாஹ் இந்த உடன்படிக்கையை செய்துள்ளார் என்ற சொற்களை மட்டும் எழுதுங்கள் என்று கூறினார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் ஏற்றுக் கொண்டாலும், ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் நான் அல்லாஹ்வின் தூதர் ஆவேன்தான்; ஆனால் நான் முஹம்மத் பின் அப்தில்லாஹ் ஆகவும் இருக்கின்றேன் என்பதனால் சரி இதுவே இருக்கட்டும். இவ்வாறு எழுதிக் கொள்ளுங்கள். முஹம்மத் பின் அப்தில்லாஹ் இந்த உடன்படிக்கை செய்துள்ளார் என்று எழுதுங்கள்.

ஆனால், இதற்கிடையில் அன்னாருடைய எழுத்தாளர் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் உடன்படிக்கை மடலில் முஹம்மத் ரஸூலுல்லாஹ் என்ற சொற்களை எழுதி விட்டிருந்தார்கள். அன்னார் (ஸல்) ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம், முஹம்மத் ரஸூலுல்லாஹ் என்ற சொற்களை அழித்து விடுவீராக ; அவற்றிற்குப் பதிலாக முஹம்மத் பின் அப்தில்லாஹ் எனும் சொற்களை எழுதுவீராக! என்று கூறினார்கள்.

ஆனால், அப்பொழுது உத்வேகத்தின் நிலை இருந்தது. ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் தன்மானம் கொண்டவாறு, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நானோ தங்கள் பெயரின் பக்கத்திலிருந்து ரஸூலுல்லாஹ் என்ற சொற்களை ஒருபோதும் அழிக்க மாட்டேன் என்று பணிவுடன் கூறினார்கள்.

அன்னார் (ஸல்) அவர்களது மனக்குழப்ப நிலையைக் கண்டு, ஆகட்டும்; நீர் அழிக்கவில்லை என்றால், என்னிடம் தருவீராக! நானே அழித்து விடுகிறேன் என்று கூறினார்கள். பிறகு அன்னார் (ஸல்) உடன்படிக்கைக்கான காகிதத்தை அல்லது அது என்னவாக இருந்ததோ அதைக் கையில் வாங்கி, ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் அந்தச் சொற்கள் இருக்கும் இடத்தைக் கேட்டு, ரஸூலுல்லாஹ் என்ற சொற்களைத் தமது கையால் அழித்து விட்டார்கள். அதற்குப் பதிலாக இப்னு அப்தில்லாஹ் என்ற சொற்களை எழுதி விட்டார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் இந்த விஷயத்தை தமது நூலில் இவ்வாறு எடுத்துரைக்கின்றார்கள்: இதற்குப் பிறகு அன்னார் (ஸல்) இவ்வாறு எழுத வைத்தார்கள். மக்கத்தினர் எங்களை பைத்துல்லாஹ்வை வலம் வருவதை விட்டும் தடுக்கக் கூடாது என்பது உடன்படிக்கை ஆகும். ஸுஹைல் உடனடியாக கூறினார்: இறைவன் மீது ஆணையாக! இந்த ஆண்டோ இது ஒருபோதும் நடக்க முடியாது; ஏனெனில், அரேபியர்களிடத்தில் எங்கள் மூக்கறுபட்டுப் போகும்; எனினும், அடுத்த ஆண்டு நீங்கள் எல்லாம் வந்து தவாஃப் செய்யலாம்.

அன்னார் (ஸல்) கூறினார்கள்:

ஆகட்டும்; இதையே எழுதுங்கள். பிறகு, ஸுஹைல் தன் தரப்பிலிருந்து இவ்வாறு எழுத வைத்தார்:

மக்கத்தினரில் எவரும் தான் முஸ்லிமாக இருந்தாலும் முஸ்லிம்களுடன் சென்று இணைந்து கொள்ள முடியாது. ஒருவேளை இப்படி எவரும் முஸ்லிம்களிடம் செல்வாராயின், அவரைத் திருப்பி அனுப்பி விட வேண்டும். ஸுப்ஹானல்லாஹ்! ஒருவர் முஸ்லிம் ஆகி வந்து நாங்கள் எப்படி அவரைத் திருப்பி அனுப்ப முடியும்? என்று ஸஹாபா பெருமக்கள் கூச்சல் எழுப்பினார்கள். எவ்வாறு இருப்பினும், இந்த உடன்படிக்கை எழுத வைக்கப்பட்டுக் கொண்டிருந்தது. இதற்கிடையில் திடீரென்று ஹஸ்ரத் அபூஜந்தல் பின் ஸுஹைல் (ரலி) அவர்கள் வந்து விட்டார்கள். அவர்களுடைய கால்களில் சங்கிலிகள் இருந்தன. அவர்கள் கண்ணியத்திற்குரிய மக்காவின் தாழ்வான பகுதியிலிருந்து வெளியே வந்தார்கள். அன்னார் (ரலி) முஸ்லிம்கள் முன் விழுந்து விட்டார்கள். உடன்படிக்கையை எழுத வைத்துக் கொண்டிருந்தது அன்னாரின் தந்தை ஸுஹைல் ஆவார். அவருடைய மகன் அன்னார் (ரலி) ஆவார்கள். முஸ்லிம் ஆகிவிட்டிருந்தார்கள்.

அன்னாரின் தந்தை ஸுஹைல் அன்னாரை சங்கிலியால் கட்டி சிறைபிடித்து வைத்திருந்தார். இவர்கள்

சிறைச்சாலையிலிருந்து வெளியேறி பொதுவான வழியைவிட்டு விலகி மலைகள் வழியாக சென்றவாறு ஹுதைபியாவுக்கு வந்து விட்டார்கள். முஸ்லிம்கள் இவர்களை வரவேற்றார்கள். வாழ்த்து தெரிவித்தார்கள். ஹஸ்ரத் அபூஜந்தல் (ரலி) அவர்களின் தந்தை அன்னாரைப் பார்த்ததும், அன்னாரின் பக்கம் எழுந்து நின்றார். மேலும், அன்னாரது முகத்தில் முற்களைக் கொண்ட கிளையால் அடித்தார். பிறகு, சட்டைக் காலரைப் பிடித்துக் கொண்டார். பிறகு இவ்வாறு கூறலானார்: முஹம்மதே! (ஸல்) எது தொடர்பாக நான் உங்களுடன் உடன்படிக்கை செய்தேனோ இது அந்த முதல் விவகாரம் ஆகும்; இப்பொழுது நீங்கள் இவனைத் திருப்பி அனுப்பி விடுங்கள்.

அப்பொழுது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இதுவரை சமரச உடன்படிக்கை முழுமையடையவில்லை. அப்போது ஸுஹைல் கூறினார்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! அப்படியானால், நான் எந்தவொரு விஷயத்திலும் உங்களுடன் சமரசம் செய்து கொள்ள மாட்டேன்; பிறகு அன்னார் (ஸல்) நீங்கள் அவரை எனக்காக விட்டு விடுங்கள் எனக் கூறினார்கள். அவரை எனக்காக விட்டு விடுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பரிந்துரை செய்தார்கள். அதற்கு, நான் அவரை எந்நிலையிலும் விடப்போவதில்லை என்று ஸுஹைல் கூறினார். இல்லை ; நீ அவரை விட்டு விடு என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். (அதாவது) மீண்டும் கூறினார்கள். அதற்கு, ஸுஹைல் நான் ஒருபோதும் இப்படி செய்ய மாட்டேன் என்றார்.

அவருடன் இருந்த மக்ரஸ் பின் ஹஃப்ஸ் மற்றும் ஹுவைதப் பின் அப்தில் உஸ்ஸா ஆகியோர் கூறினார்கள்: நாங்கள் அவரை உங்களுக்காக விட்டு விட்டோம்; இருவரும் ஹஸ்ரத் அபூஜந்தல் (ரலி) அவர்களைப் பிடித்து ஒரு கூடாரத்தில் நுழைத்து விட்டார்கள். அவர்களுக்கு அனுமதி வழங்கி விட்டார்கள். ஆனால், அவரின் தந்தை ஸுஹைல் மறுத்து விட்டார். முஸ்லிம்களின் கூட்டமே! இப்பொழுது நான் இணை வைப்பாளர்களிடம் திருப்பி அனுப்பப்படுவேனா? ஆனால், நானோ முஸ்லிமாகி வந்துள்ளேன்; எனக்கு ஏற்பட்டுள்ள இன்னல்களையும் எனக்குக் கடுமையான தண்டனை வழங்கப்படுவதையும் நீங்கள் பார்ப்பதில்லையா? என்று ஹஸ்ரத் அபூஜந்தல் (ரலி) அவர்கள் கேட்டார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குரலை உயர்த்தி, அபூ ஜந்தலே! பொறுமை காப்பீராக! நற்கூலிக்கான நம்பிக்கை வைப்பீராக! ஐயமின்றி, அல்லாஹ் உமக்காகவும் பலவீனமான உம் தோழர்களுக்காகவும் எளிமைக்கான, விடுதலைக்கான வழியை உருவாக்கி விடுவான்; நாம் சமுதாயத்தோடு சமரசத்திற்கான உடன்படிக்கை செய்துள்ளோம். நாம் இவர்களுக்கும், இவர்கள் நமக்கும் வாக்குறுதி அளித்துள்ளார்கள்; மேலும், நாம் ஏமாற்றக் கூடியவர்கள் அல்ல.

இந்த தருணத்தில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடைய உணர்ச்சி மிகுதி மற்றும் உத்வேகத்தைப் பற்றியும் குறிப்பு கிடைக்கின்றது. இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: முஸ்லிம்களுக்கு இந்த நிபந்தனைகள் பிடிக்கவில்லை. அவர்கள் சினம் கொண்டார்கள். ஸுஹைல் இந்த நிபந்தனைகள் இல்லாமல், சமரசம் செய்து கொள்ள மறுத்து விட்டார். அவர்கள் சமரசத்தை முடிவு செய்து விட்ட பிறகு, எழுதுவது எஞ்சியிருந்தது. அப்பொழுது ஹஸ்ரத் உமர் பின் ஃஹத்தாப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தார்கள். மேலும், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நாம் உண்மையில் நிலைத்திருக்கவில்லையா? அந்தக் காஃபிர்கள் பொய்யில் இருக்கவில்லையா? எனக் கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், ஏன் இல்லை? எனக் கூறினார்கள்.

கொல்லப்பட்ட நம் மக்கள் சொர்க்கத்திலும், கொல்லப்பட்ட இவர்களின் மக்கள் நரகத்திலும் இல்லையா? என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். ஏன் இல்லை? என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், ஹுதைபியா நாளன்று நாம் சமரசம் செய்யும்போது, நமது மார்க்கம் தொடர்பாக இத்தகைய இழிவை ஏன் பொறுத்துக் கொள்ள வேண்டும்? அல்லாஹ் நமக்கும், அவர்களுக்கும் இடையில் தீர்ப்பு வழங்கிவிடாத வரை நாம் இங்கிருந்து வெறுமனே திரும்பிச் சென்று விட வேண்டுமா? போரிடாமல், உரிமையைப் பெறாமல் சென்று விட வேண்டுமா? என்று கேட்டார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

நான் அல்லாஹ்வின் அடியாரும், அவனுடைய தூதரும் ஆவேன்; நான் அவனுக்குக் கட்டுப்படாமல் இருப்பதில்லை; அவன் என்னை ஒருபோதும் வீணாக்க மாட்டான்; அவன் எனக்கு உதவி புரியக் கூடியவன் ஆவான். ஹஸ்ரத் உமர் பின் ஃஹத்தாப் (ரலி) அவர்கள் நாம் அண்மையில் பைத்துல்லாஹ்வுக்கு வருவோம்; பைத்துல்லாஹ்வை வலம் வருவோம் என்று தாங்கள் எங்களிடம் கூறவில்லையா? என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஏன் இல்லை? நான் உங்களிடம் நீங்கள் இந்த ஆண்டே வருவீர்கள் என்று கூறினேனா? எனக் கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், இல்லை என்று கூறினார்கள். பிறகு ஹுஸுர் (ஸல்) அவர்கள், நீங்கள் பைத்துல்லாஹ்வுக்கு வருவீர்கள்; அதை வலம் வருவீர்கள் என்று கூறினார்கள்.

பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சினங்கொண்ட நிலையில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் சென்றார்கள். (அதாவது) பொறுமை காக்கவில்லை. அவர்களிடம், அபூபக்ரே! அல்லாஹ்வின் நபியான இவர்கள் உண்மையில் நிலைத்திருக்கவில்லையா? எனக் கேட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், ஏன் இல்லை? எனக் கூறலானார்கள். அடுத்து, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், அந்த மக்கள் பொய்யிலும் நாம் உண்மையிலும் நிலைத்திருக்கவில்லையா? கொல்லப்பட்ட நம் மக்கள் சொர்க்கத்திற்கும், கொல்லப்பட்ட இவர்களின் மக்கள் நரகத்திற்கும் செல்ல மாட்டார்களா? எனக் கேட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், ஏன் இல்லை? என்று கூறினார்கள்.

### திருக்குர்ஆனிலிருந்து...

நான் ஜின்களையும், மனிதர்களையும்
என்னை வணங்குவதற்காகவே
படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

இதைக் கேட்ட ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், பிறகு ஏன் நாம் நமது மார்க்கத்தில் பலவீனத்தை மேற்கொள்ள வேண்டும்? அல்லாஹ் நமக்கும், அவர்களுக்கும் இடையில் தீர்ப்பு வழங்காத நிலையில் நாம் ஏன் திரும்பிச் செல்ல வேண்டும்? என்று கேட்டார்கள். அப்பொழுது, அன்னார் (ஸல்) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) ஆவார்கள்; தம் இறைவனுக்குக் கட்டுப்படாமல் இருக்க மாட்டார்கள்; அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு உதவி புரியக் கூடியவன் ஆவான். எனவே நீர் உம்மை - ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் கூறினார்கள் - நீர் உம்மை மரணிக்கும் வரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குக் கட்டுப்படுதலோடு இணைத்து வைத்திருப்பீராக! அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவர்கள் உண்மையில் நிலைத்திருக்கிறார்கள் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

மற்றோர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது: (ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள்) அன்னார் (ஸல்) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) ஆவார்கள் என்று கூறினார்கள். பிறகு, ஐயமின்றி, முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) ஆவார்கள் என்று நான் சாட்சி பகர்கின்றேன் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், அன்னார் நாம் அண்மையில் பைத்துல்லாஹ்வுக்கு வருவோம்; அதை வலம் வருவோம் என்று நம்மிடம் கூறவில்லையா? என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பதில் அளித்தவாறு, ஏன் இல்லை?ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த ஆண்டே வலம் வருவீர்கள் என்று உமக்கு கூறினார்களா? என்று கேட்டார்கள். அதற்கு, இல்லை! என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். அப்பொழுது, நீர் கண்டிப்பாக பைத்துல்லாஹ்வுக்குச் சென்று அதை வலம் வருவீர்! என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள். எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு இந்த நிபந்தனைகள் முற்றிலும் பிடிக்கவில்லை.

புகாரீயில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக, நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதலிருந்து ஹுதைபியா நாளைத் தவிர, ஒருபோதும் ஐயம் கொள்ளவில்லை. மேலும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பேச்சுக்கு பதில் அளித்துக் கொண்டே இருந்தேன். அதாவது ஒருபோதும், நான் முன்னால் இருந்து பேசியதில்லை. ஆனால், அப்பொழுது பதில் பேசிக் கொண்டிருந்தேன். ஹஸ்ரத் அபூஉபைதா பின் ஜர்ராஹ் (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஃஹத்தாபின் மகனே! நீர் ஷைத்தானிடமிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுவீராக! ; மேலும் உமது கருத்தை சரியாக்கிக் கொள்வீராக!

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: பிறகு நான் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடத் துவங்கினேன். எனக்கு அவ்வளவு வெட்கம் எப்போதும் ஏற்பட்டதில்லை. பிறகு நான் கட்டளையை நிறைவேற்றாமல் துவக்கத்தில் இடைநிறுத்திய அந்தக் குற்றத்திற்கு மன்னிப்பு கிடைப்பதற்காக நற்செயல்களையும் செய்தேன். நான் ஹுதைபியா தருணத்தில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன்

செய்த உரையாடல் காரணமாக ஸதக்கா கொடுத்துக் கொண்டே வந்தேன். நோன்பு வைத்துக் கொண்டே சென்றேன். அடிமைகளை விடுவித்துக் கொண்டே சென்றேன். எதுவரை என்றால், இப்பொழுது நன்மை ஆகிவிட்டது என்ற நம்பிக்கை எனக்கு வந்து விட்டது. அதாவது இப்பொழுது அல்லாஹ் மன்னித்து விடுவான் என்ற உணர்வு ஏற்பட்டது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களும் இந்த நிகழ்வை இவ்வாறு எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். ஒருமுறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸஹாபா பெருமக்களைப் பார்த்து, நான் உங்களுக்குப் பல கட்டளைகள் இட்டுள்ளேன். ஆனால், நான் உங்களில் களங்கமற்ற மக்களுக்குள்ளும் சிலவேளை எதிர்க்கும் உணர்வைப் பார்த்திருக்கிறேன். ஆனால், அபூபக்ரிடம் நான் இந்த உணர்வை ஒருபோதும் பார்த்ததில்லை.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் பண்பாக இதைக் கூறினார்கள்.

பிடித்திருந்தாலும், பிடிக்காவிட்டாலும் அவர்கள் ஒருபோதும் நான் கூறியதை மறுத்ததில்லை.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹுதைபியா சமாதான உடன்படிக்கை தருணத்தில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் போன்ற மாபெரும் மனிதரும் பதற்றம் அடைந்து விட்டார்கள். அவர்கள் இதே பதற்றமடைந்த நிலையில், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் சென்றார்கள். மேலும், நாம் உம்ரா செய்வோம் என்று நம்மிடம் இறைவன் வாக்குறுதி அளித்திருக்கவில்லையா? எனக் கேட்டார்கள். அதற்கு, ஆம், இறைவனது வாக்குறுதி இருந்தது; என்று அன்னார் (ரலி) கூறினார்கள். இறைவன் நம்மிடம், அவன் நமக்கு உதவியும், ஆதரவும் வழங்குவதாக வாக்குறுதி அளிக்கவில்லையா? எனக் கேட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், ஆம்! இருந்தது என்று கூறினார்கள். பிறகு நாம் உம்ரா செய்தோமா? என்று அன்னார் (ரலி) கேட்டார்கள். அதற்கு, உமரே! நாம் இந்த ஆண்டே உம்ரா செய்வோம் என்று அல்லாஹ் எப்பொழுது கூறினான்? என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கேட்டார்கள்.

பிறகு அவர்கள் நமக்கு வெற்றியும் உதவியும் கிடைத்ததா? என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வெற்றி மற்றும் உதவிக்கான பொருளை அல்லாஹ்வும், அவனது தூதரும் நம்மை விட சிறப்பாக அறிவர் என்று கூறினார்கள். ஆனால், அந்த பதிலால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்குத் திருப்தி கிடைக்கவில்லை. அவர்கள் இதே பதற்றமான நிலையில், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் சென்றார்கள். மேலும், அன்னாரிடம், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நாம் வலம் வந்தவாறு மக்காவில் நுழைவோம் என்று இறைவன் வாக்குறுதி அளிக்கவில்லையா? என்று பணிவுடன் கேட்டார்கள். அதற்கு ஹுஸூர் (ஸல்) அவர்கள், ஆமாம் என்று கூறினார்கள்.

நாம் இறைவனின் ஜமாஅத் இல்லையா? இறைவன் நமக்கு வெற்றி மற்றும் உதவிக்கான வாக்குறுதி அளித்திருக்கவில்லையா? என அன்னார் (ரலி) கேட்டார்கள். அதற்கு, ஆம்! இருந்தது என்று ஹுஸூர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நாம் உம்ரா செய்தோமா? எனக் கேட்டார்கள். அன்னார் (ஸல்) இந்த ஆண்டே உம்ரா செய்வோம் என்று அல்லாஹ் எப்பொழுது கூறினான்? இந்த உம்ரா நடைபெறும் என்றோ நான் நினைத்திருந்தேன். இறைவனோ நேரம் எதுவும் நிர்ணயித்துக் கூறியிருக்கவில்லையே.

பிறகு வெற்றி மற்றும் உதவிக்கான வாக்குறுதிக்கு என்ன பொருள்? என்று அவர்கள் கேட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இந்தக் கேள்வியைக் கேட்டார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இறை உதவி நிச்சயம் வரும்; அவன் செய்த வாக்குறுதி எந்நிலையிலும் நிறைவேறும். ஆக, எந்த பதிலை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அளித்தார்களோ அதே பதிலை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வழங்கினார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தொடர்பாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்று தம்முடைய உணர்வுகளை வெளிப்படுத்தியது மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் சென்று இதே விஷயத்தைப் பேசியதாக பல்வேறு அறிவிப்புகள் கிடைக்கின்றன. வரிசை வேறுபட்டிருக்கிறது. முன்னர் கூறியது போன்றும், இப்பொழுது கூறியது போன்றும் உள்ளது. ஆனால், ஒரே நிகழ்வுதான். இது முன்னும் பின்னும் மாறுவதனாலும் இந்த நிகழ்வின் உண்மைத்துவத்தில் எந்த மாற்றமும் ஏற்படுவதில்லை.

சமாதான உடன்படிக்கை மடல் தொடர்பாக ஸீரத் காத்தன் நபிய்யீன் என்ற நூலில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

எவ்வாறிருப்பினும், விவாதத்திற்குப் பிறகு இந்த உடன்படிக்கை முழுமையானது. ஏறத்தாழ எல்லா விஷயத்திலும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது கூற்றை விட்டுவிட்டு குறைஷியர்களின் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டார்கள்.

இறை நாட்டத்தின்படி, பைத்துல்லாஹ்வின் கண்ணியத்திற்காக குறைஷியர்கள் தரப்பலிருந்து எந்தக் கோரிக்கை வைக்கப்பட்டாலும் அது ஏற்றுக் கொள்ளப்படும் ; எந்நிலையிலும் ஹரமுடைய கண்ணியம் காக்கப்படும் என்ற தமது உறுதிமொழியை முழு நன்றியுணர்வுடன் நிறைவேற்றினார்கள். அந்த உடன்படிக்கையின் நிபந்தனைகள் கீழ்வருமாறு:

ஒன்று, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் அன்னாரின் தோழர்களும், இந்த ஆண்டு திரும்பிச் சென்று விட வேண்டும்.

இரண்டு, அடுத்த ஆண்டு அவர்கள் மக்கா வந்து உம்ராவுக்கான அம்சங்களை நிறைவேற்றலாம். எனினும், உறையிடலப்பட்ட வாளைத் தவிர (வேறு) எந்த ஆயுதமும் உடனிருக்கக் கூடாது. மேலும் மக்காவில் மூன்று நாட்களுக்கு மேல் தங்கக் கூடாது.

மூன்று, மக்கத்தினரில் எவராவது ஓர் ஆண் மதீனா சென்றால், அவர் முஸ்லிமாகவே இருந்தாலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவருக்கு மதீனாவில் தஞ்சம் அளிக்கக் கூடாது: மாறாக, அவரை திருப்பி அனுப்பி விட வேண்டும்.

ஆக, இது தொடர்பாக ஸஹீஹ் புகாரீயின் சொற்கள் இவையாகும்;

لَا يَأْتِيكَ مِنَّا رَجُلٌ

وَإِنْ كَانَ عَلَى دِينِكَ إِلَّا رَدَدْتَهُ إِلَيْنَا

பொருள்: எங்களில் எவராவது ஓர் ஆண் தங்களிடம் வந்தால், நீங்கள் அவரைத் திருப்பி அனுப்பி விட வேண்டும்.

ஆனால், ஒரு முஸ்லிம் எவராவது மதீனாவை விட்டுவிட்டு மக்காவுக்கு வந்து விட்டால், அவர் திருப்பி அனுப்பப்படமாட்டார்.

ஒருவர் முஸ்லிம் ஆகி மதீனாவுக்குச் சென்றால் அவர் திருப்பி அனுப்பப்பட வேண்டும்: ஆனால், முஸ்லிம் ஒருவர் எப்படியாவது மக்காவுக்கு வந்து விட்டால், அவர் பிடிக்கப்பட்டால் அவர் திருப்பி அனுப்பப்பட மாட்டார் என்ற தமது நிபந்தனையை அவர்கள் ஒப்புக் கொள்ள வைத்து விட்டார்கள்.

ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது: மக்கத்தினரில் ஒருவர் தமது வலீ, அதாவது காப்பாளரின் அனுமதியின்றி மதீனாவுக்கு வந்து விட்டால், அவர் திருப்பி அனுப்பப்பட வேண்டும்.

நான்கு, அரபு கோத்திரங்களில் எவர் வேண்டுமானாலும், முஸ்லிம்களின் கோத்திரமாகலாம். எவர் வேண்டுமானாலும் மக்கத்தினரின் தோழமைக் கோத்திரமாகலாம்.

ஐந்தாவது நிபந்தனையாக இருந்தது என்னவென்றால், இந்த உடன்படிக்கை தற்போதைக்கு 10 ஆண்டுகள் வரைக்குமாக இருக்கும். மேலும், இந்தக் காலகட்டத்தில் குறைஷியர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையில் போர் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும்.

ஹுதைபியா சமாதான உடன்படிக்கையின் சாட்சிகள் பற்றி இவ்வாறு விளக்கம் வருகிறது: இந்த உடன்படிக்கைக்கு 2 பிரதிகள் எடுக்கப்பட்டன. சாட்சிகளாக இருதரப்பின் பல்வேறு கண்ணியத்திற்குரியவர்கள் அவற்றில் கையொப்பம் பதிந்தனர். முஸ்லிம்கள் தரப்பிலிருந்து கையொப்பமிட்டவர்களில், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள்- (அன்னார் அந்த நேரத்தில் மக்காவிலிருந்து திரும்பி வந்துவிட்டிருந்தார்கள்), அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள், ஸஃது பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்கள் மற்றும் அபூ உபைதா (ரலி) அவர்கள் ஆகியோர் இருந்தார்கள். உடன்படிக்கை முடிவடைந்த பிறகு ஸுஹைல் பின் அம்ர் உடன்படிக்கையின் ஒரு பிரதியை எடுத்துக் கொண்டு, மக்காவை நோக்கி திரும்பிச் சென்று விட்டார். இன்னொரு பிரதி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் இருந்தது.

ஸஹாபிகளிடம் மனஉளைச்சல் ஏற்பட்டது பற்றியும் கூறப்படுகிறது. முன்னரும் கூறப்பட்டிருந்தது போன்று, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இந்த எழுதும் விவகாரத்தை முடித்த பிறகு அன்னார் (ஸல்) தம் ஸஹாபா பெருமக்களிடம், எழுந்திருங்கள்; உங்களுடைய ஒட்டகங்களை அறுத்து விடுங்கள். பிறகு தலையை மழித்துக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். அவர்களில் ஒருவர் கூட எழவில்லை. எதுவரை என்றால், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இதையே மூன்று முறை கூறினார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள், இதை இவ்வாறு எடுத்துக் கூறியுள்ளார்கள்: ஸுஹைல் திரும்பிச் சென்றதும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸஹாபிகளிடம்,

இதோ இப்பொழுது எழுந்திருங்கள்; இங்கேயே உங்களுடைய குர்பானி விலங்குகளை அறுத்து விட்டு தலையை மழித்துக் கொள்ளுங்கள் - குர்பானிக்குப் பிறகு தலையை சிரைத்துக் கொள்ளவோ அல்லது முடியை கத்தரித்துக் கொள்ளவோபடுகிறது. மேலும், திரும்பிச் செல்ல ஏற்பாடு செய்யுங்கள் என்று கூறினார்கள்.

ஆனால், ஸஹாபா பெருமக்களுக்கு வெளிப்படையில், இழிவுப்படுத்தும் இந்த உடன்படிக்கையின் காரணமாக பெருந் துயரம் ஏற்பட்டிருந்தது. அத்துடன் அவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு கனவின் அடிப்படையில் நம்மை இங்கு அழைத்து வந்தார்கள்; அல்லாஹ் கனவில் பைத்துல்லாஹ்வை வலம் வரும் காட்சியும் காட்டியிருந்தான் என்ற விஷயத்தின் பக்கம் சிந்தனை செல்லும் போது, அவர்களுடைய இயல்பு, ஸஹாபிகளுடைய இயல்பு, மிகவும் சோர்வடைய ஆரம்பித்து விட்டது. ஏறக்குறைய அவர்கள் உயிரற்றவர்களைப் போன்று அசைவற்று இருந்தார்கள்.

அவர்களுக்கு இறைவனின் தூதர் மீது முழுமையான ஈமான் இருந்தது. இறைவனது வாக்குறுதியின் மீதும் முழுமையான மற்றும் உறுதியான நம்பிக்கை இருந்தது. ஆனால், மனிதத் தேவைகளின் அடிப்படையில் மனித எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப, அவர்களுடைய உள்ளங்கள் இந்த வெளிப்படையான தோல்வியினால், வேதனை அடைந்திருந்தன. இது உடனடியான எதிர்வினையாக இருந்தது. எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த மக்களிடம், இப்போது இங்கேயே குர்பானி விலங்குகளை அறுத்து விடுங்கள் ; மக்காவில் நாம் நுழைந்தோமோ நுழையவில்லையோ கஅபா ஆலயத்துக்குச் சென்றோமோ இல்லையோ? வலம் வந்தோமோ? இல்லையோ? இங்கு அமர்ந்துள்ளோம்; குர்பானி கொடுத்து விடுங்கள். மேலும், திரும்பிச் செல்லுங்கள் என்று கூறியபோது எந்தவொரு ஸஹாபியும் முன்னாலிருந்து அசையவில்லை; எவரும் தம் இடத்திலிருந்து நகரவில்லை.

குர்பான் கொடுப்பதற்காக கொண்டு வந்திருந்தவர்கள் அனைவரும் அமர்ந்திருந்தார்கள். அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குக் கட்டுப்படாதவர்களாக இருந்தார்கள் என்பதனால் அல்ல. நவூதுபில்லாஹ்! (அவ்வாறு கூறுவதை விட்டு நாம் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறோம்.) ஏனெனில், ஸஹாபாவை விட அதிகம் கட்டுப்படும் எந்தக் கூட்டமும் உலகில் இருந்திருக்கவில்லை. எனவே, அவர்கள் கிளர்ச்சி செய்யும் விதமாகவோ அல்லது கட்டுப்படாத வகையிலோ இதை செயல்படுத்தாமல் இருக்கவில்லை. மாறாக, எதனால் இருந்தது என்றால், வேதனை மற்றும் வெளிப்படையான இழிவுக்கான உணர்வு அவர்களை எந்த அளவுக்கு வலுவிழக்கச் செய்திருந்தது என்றால் அவர்கள் கேட்டும் கேட்காமல் இருந்தனர்; பார்த்தும் அவர்களின் கண்கள் வேலை செய்யாமல் இருந்தன.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது வழிகாட்டலை இரண்டாவது முறையாகவும் மூன்றாவது முறையாகவும் கூறினார்கள். ஆனால், எந்தவொரு ஸஹாபியும் முன்னிலிருந்து அசையவில்லை. எனது கட்டளைப்படி யாரும் செயல்படவில்லையே! என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பெருந்துயரம் ஏற்பட்டது. ஹுஸுர் (ஸல்) அவர்கள் மௌனமாக தமது கூடாரத்திற்குள் சென்று விட்டார்கள். கூடாரத்திற்குள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கண்ணியத்திற்குரிய துணைவியார் ஹஸ்ரத் உம்மு ஸலமா (ரலி) அவர்கள் இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் மிகவும் புத்திக் கூர்மையுள்ள பெண்மணியாக இருந்தார்கள். அவர்கள் தம் கண்ணியத்திற்குரிய மற்றும் அன்பிற்குரிய கணவரைக் கவலை தோய்ந்த நிலையில் உள்ளே வரக் கண்டார்கள். மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது (அருளுக்குரிய) நாவிலிருந்து அன்னாரது கவலை மற்றும் வேதனையின் விபரங்களை அறிந்து கொண்டார்கள்.

எனவே அனுதாபம் மற்றும் அன்பான விதத்தில், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் வேதனையடைய வேண்டாம்; இறையருளால் தங்கள் ஸஹாபா பெருமக்கள் கட்டுப்படாதவர்கள் அல்ல; ஆனால், இந்த சமரசத்திற்கான நிபந்தனைகள் அவர்களைத் துயரத்தால் பித்துப் பிடித்தவர்களாக ஆக்கி வைத்துள்ளன. எனவே எனது ஆலோசனை என்னவென்றால், தாங்கள் அவர்களிடம் எதுவும் கூறாதீர்கள்; மாறாக, தாங்கள் மௌனமாக வெளியே சென்று தங்களது குர்பானுக்கான விலங்கை அறுத்து விடுங்கள்; தங்களது தலையை மழித்துக் கொள்ளுங்கள்; பிறகு தங்கள் ஸஹாபா தாமாகவே தங்களைப் பின்பற்றுவார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இந்த ஆலோசனை பிடித்து விட்டது. அன்னார் (ஸல்) வெளியே வருகை தந்து எதுவும் கூறாமல், தமது குர்பானுக்கான விலங்கை அறுத்து, தமது தலையை மழித்துக் கொள்ளத் துவங்கி விட்டார்கள். ஸஹாபா பெருமக்கள் இந்தக் காட்சியை பார்த்த போது, உறங்கிக் கொண்டிருக்கும் ஒருவர் சப்தம் ஏதும் கேட்டு திடீரென்று கண்விழித்துக் கொள்வது போன்று, அவர்கள் அதிர்ந்து எழுந்து நின்றார்கள். மேலும், பித்துப் பிடித்தவர்களாக தம்முடைய விலங்குகளை அறுக்கத் துவங்கி விட்டார்கள். ஒருவர் மற்றவரது தலையை மழிக்கத் துவங்கி விட்டார்கள். ஆனால், துன்பம் எந்த அளவுக்கு மன உளைச்சலுக்கு ஆளாக்கி வைத்திருந்தது என்றால், அறிவிப்பாளர் கூறுகின்றார்:

அப்பொழுது நிலைமை எப்படி இருந்தது என்றால் முஸ்லிம்கள் ஒருவர் மற்றவரது தலையை மழித்தவாறு ஒருவர் மற்றவரது தலையை எங்கும் வெட்டி விடுவார்களோ என்ற அச்சம் இருந்தது. எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் உம்மு ஸலமா (ரலி) அவர்களின் ஆலோசனை பயனளித்தது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது அருளுக்குரிய நாவின் சொற்கள் தற்காலிகமாக வெற்றியடையாமல் இருந்த அதேவேளையில், ஹுஸுர் (ஸல்) அவர்களின் செயல் உறங்கிக் கொண்டிருந்தவர்களை அதிர வைத்து எழுப்பிவிட்டது.

இதுவும் ஸீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலின் சான்றாகும்.ஆக, ஹுதைபியா எனும் இடத்தில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் குர்பானுக்கான தமது ஒட்டகத்தை அறுத்துவிட்டதும், குர்பானிக்கான விலங்குகளில், பத்ரின் போர்ச் செல்வங்களில் ஒன்றான அபூஜஹ்லின் ஒட்டகம் மேய்ந்து கொண்டிருந்த போது ஓடிவிட்டது. அது விடப்பட்டிருந்தது. அது சென்று விட்டது. அதற்கு மாலை அணிவிக்கப்பட்டிருந்தது. அது அடையாளமிடப்பட்டிருந்தது. அது குர்பான் கொடுப்பதற்காக கொண்டு வரப்பட்டிருந்தது. அது சிறிது நேரத்திற்கு ஓடிப் போய்விட்டது. ஆனால், எவ்வாறாயினும், கடைசியில் அப்பொழுது பிடிக்கப்பட்டது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அந்த ஒட்டகத்தை ஏழு பேர் தரப்பிலிருந்து அறுத்தார்கள்.

ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 70 விலங்குகளை அறுத்தார்கள். ஒரு விலங்கு ஏழு பேர் சார்பாக இருந்தது. அன்றைய நாள் நாங்கள் 1400 பேர் இருந்தோம். குர்பான் கொடுக்கும் மக்களை விட அதிகம் பேர் குர்பான் கொடுக்காதவர்கள் இருந்தார்கள். அவர்களுக்கு அவ்வளவு வசதி இருக்கவில்லை.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கண்ணியத்திற்குரிய பகுதிக்கு வெளியே தங்கியிருந்தார்கள். ஆனால், தொழுகைகளை கண்ணியத்திற்குரிய பகுதியில் நிறைவேற்றி வந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் குர்பானுக்கான தம்முடைய விலங்குகளிலிருந்து 20 விலங்குகளை மர்வாவுக்கு அருகில் குர்பானி கொடுப்பதற்காக கொடுத்தனுப்பினார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் விலங்குளை அறுத்து முடித்த பிறகு, கூடாரத்திற்குள் சென்றார்கள். மேலும், ஹஸ்ரத் ஹராஷ் பின் உமையாவை அழைத்தார்கள். தமது தலையை மழிக்கச் செய்தார்கள். மேலும், தமது முடிகளை ஒரு பக்கமாக, முற்களைக் கொண்ட பசுமையான மரத்தின் மீது போட்டுவிட்டார்கள். மக்கள் மரத்தின் மேலிருந்து முடிகளை எடுத்துக் கொண்டு, தங்களுக்குள் பங்கிட்டுக் கொள்ளலானார்கள்.

ஹஸ்ரத் உம்மு அம்மாரா (ரலி) அவர்கள் அன்னாருடைய முடிகள் சிலவற்றை எடுத்தார்கள். அவர்கள் நோயாளிகளுக்காக அதைத் தண்ணீரில் போடுவார்கள். சிகிச்சைக்காகவும் நோயாளிக்கு அருந்தக் கொடுப்பார்கள். நோயாளிகள் சிலர் உடல் நலம் பெற்றதாகக் கூறப்படுகிறது. இன்னும் சொல்வதாயின், நலமாகி வந்தார்கள். அவற்றில் பரக்கத் இருந்தது. ஸஹாபா பெருமக்களில் சிலர் சிலருடைய தலையை மழிக்க ஆரம்பித்தார்கள். முஸ்லிம்கள் தலையை மழித்துக் கொண்டார்கள். சிலர் தலையை சிரைத்துக் கொண்டார்கள். சிலர் முடியைக் கத்தரித்துக் கொண்டார்கள். அவர்களில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களும் ஹஸ்ரத் அபூகத்தாதா (ரலி) அவர்களும் இருந்தார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், அல்லாஹ் தலையை சிரைத்துக் கொண்டவர்கள் மீது கருணை புரிவானாக! என்று மூன்று முறை கூறினார்கள். பிறகு,

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

நான்காவது முறை, கத்தரித்துக் கொண்டவர்கள் மீது அதாவது முடியை வெட்டிக் கெண்டவர்கள் மீதும் கருணை புரிவானாக! என்று கூறினார்கள்.

அறிவிப்பில் வருகிறது: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹுதைபியாவில் 19 நாட்கள் வரை தங்கியிருந்தார்கள். 20 இரவுகள் தங்கியிருந்ததாகக் கூறப்படுகிறது. முஹம்மது பின் உமர், வாக்தீ மற்றும் இப்னு ஸஃது ஆகியோர் இதைக் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் இதை இவ்வாறு எடுத்துரைத்துள்ளார்கள்: குர்பான் கொடுப்பது போன்றவற்றை முடித்த பிறகு, ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மதீனா பக்கம் திரும்பிச் செல்லுமாறு கட்டளையிட்டார்கள். அப்பொழுது அன்னார் (ஸல்) ஹுதைபியாவுக்கு வந்து 20 நாள்களுக்குச் சற்று குறைவான காலம் ஆகியிருந்தது. அன்னார் (ஸல்) திரும்பிச் செல்லும் பயணத்தில் உஸ்ஃபானுக்கு அருகில் குர்உல் ஃகமீம் எனும் பகுதியைச் சென்றடைந்த போது, அது இரவு நேரமாக இருந்தது. அப்பொழுது அன்னார் (ஸல்) அறிவிப்பு செய்ய வைத்து ஸஹாபிகளை ஒன்று திரட்டச் செய்தார்கள். மேலும், இவ்வாறு கூறினார்கள்: இன்று இரவு எனக்கு ஒரு சூரா இறங்கியது. அது எனக்கு உலகின் எல்லா விஷயங்களைக் காட்டிலும் அன்பிற்குரியதாகும். அது இதுவாகும்:

إِنَّا فَتَحْنَا لَكَ فَتْحًا مُّبِينًا ﴿٢﴾
لِّيَغْفِرَ لَكَ اللّٰهُ مَا تَقَدَّمَ مِنْ ذَنْبِكَ
وَمَا تَأَخَّرَ وَيُتِمَّ نِعْمَتَهُ
عَلَيْكَ وَيَهْدِيَكَ صِرَاطًا مُّسْتَقِيمًا ﴿٣﴾
وَّيَنْصُرَكَ اللّٰهُ نَصْرًا عَزِيزًا

இவை சூரா ஃபத்ஹின் 2 முதல் 4 வரையிலான வசனங்கள் ஆகும். பிறகு 28-வது வசனமும். இது தொடர்பாக இவ்வாறு வருகிறது:

لَقَدْ صَدَقَ اللّٰهُ رَسُولَهُ الرُّءْيَا بِالْحَقِّ
لَتَدْخُلُنَّ الْمَسْجِدَ الْحَرَامَ
إِنْ شَاءَ اللّٰهُ اٰمِنِينَ مُحَلِّقِينَ رُءُوسَكُمْ
وَمُقَصِّرِينَ لَا تَخَافُونَ

(அல் ஃபத்ஹ்: 2 -4, 28)

பொருள்: (தூதரே!) நிச்சயமாக நாம் உமக்கு மிகத் தெளிவான ஒரு வெற்றியினை வழங்கியுள்ளோம். இதன் விளைவாக (அவர்கள்) உமக்குச் செய்த சென்ற கால பாவங்களையும், எதிர்காலத்(தில் செய்யவிருக்கின்ற) தவறுகளையும் அல்லாஹ் உமக்காக மூடி மறைத்து விடுவான். மேலும் உமக்குத் தன் அருளை முழுமைப்படுத்தி உமக்கு (வெற்றிக்கான) நேரான வழியினைக் காட்டுவான். மேலும் அல்லாஹ் உமக்கு வல்லமை மிகு உதவியைச் செய்வான். உண்மை என்னவென்றால், அல்லாஹ் தன் தூதருக்கு (அவர் கண்ட) அக்கனவை முற்றிலும் உண்மையுடன் நிறைவேற்றினான். அல்லாஹ் விரும்பினால், நிச்சயமாக நீங்கள் அமைதியுடனும் (உங்களுள் சிலர்) தங்கள் தலைகளைச் சிரைத்துக் கொண்டவர்களாகவும், (மற்றுஞ் சிலர் தங்கள்) முடிகளைக் கத்தரித்துக் கொண்டவர்களாகவும் புனிதப் பள்ளியில் நுழைவீர்கள். நீங்கள் எவருக்கும் அஞ்சமாட்டீர்கள்.

அதாவது நீங்கள் இந்த ஆண்டு மக்காவில் நுழைந்து விட்டிருந்தால், இந்த நுழைதல் அமைதியுடன் இருந்திருக்காது. மாறாக, போர் மற்றும் இரத்தம் சிந்துதலுடனான நுழைதலாக இருந்திருக்கும். ஆனால், இறைவன் கனவில் அமைதியுடன் நுழைவதைக் காட்டியிருந்தான். எனவே இறைவன் இவ்வாண்டு உடன்படிக்கையின் விளைவாக அமைதிக்கான சூழலை உருவாக்கி விட்டான். மேலும், இப்பொழுது அண்மையில் நீங்கள் இறைவன் காட்டிய கனவுக்கு ஏற்ப அமைதியுடன் புனிதப் பள்ளியில் நுழைவீர்கள்.

ஆக, அவ்வாறே நடந்தது. ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இந்த வசனங்களை ஸஹாபாவுக்கு ஓதிக் காட்டியபோது, அப்பொழுது வரை சில ஸஹாபிகளின் உள்ளத்தில் ஹுதைபியா சமரச உடன்படிக்கையின் கசப்பு எஞ்சியிருந்ததனால் அவர்கள் வெளிப்படையில் நாம் தோல்வியடைந்து திரும்பிச் செல்கிறோம். இறைவன் நமக்கு வெற்றிக்கான நற்செய்தியைக் கூறுகிறானே! என்று வியப்படைந்தார்கள்.

எதுவரை என்றால் அவசரக்காரர்களாக இருந்த ஸஹாபா சிலர், நாம் பைத்துல்லாஹ்வை வலம் வராமல் இழப்பிற்குரியவர்களாகத் திரும்பிச் செல்கின்ற இதுதான் வெற்றியா? போன்ற சொற்களையும் கூறினார்கள். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வரை இந்த விஷயம் எட்டியபோது, அன்னார் (ஸல்) மிகவும் அதிருப்தியை வெளிப்படுத்தினார்கள். மேலும் ஒரு சுருக்கமான உரையில் உத்வேகத்துடன் இவ்வாறு கூறினார்கள்:

இது முற்றிலும் பொருளற்ற ஆட்சேபனை ஆகும். ஏனெனில், ஆழ்ந்து கவனம் செலுத்தினால், உண்மையிலேயே ஹுதைபியா சமரச உடன்படிக்கை நமக்கு ஒரு மாபெரும் வெற்றியாகும்.

அன்னார் (ஸல்) கூறினார்கள்: நமக்கு எதிராக போர்க் களத்தில் இறங்கியிருந்த குறைஷியர்கள் தாமே போரை கைவிட்டு விட்டு அமைதிக்கான உடன்படிக்கை செய்து கொண்டார்கள். மேலும், அடுத்த ஆண்டு நமக்காக மக்காவின் கதவுகளைத் திறந்து விடுவதற்கான வாக்குறுதியளித்துள்ளார்கள். நாம் அமைதியுடனும், நிம்மதியாகவும் மக்கத்தினரின் குழப்பமூட்டுதலிலிருந்து பாதுகாப்பாக இருந்த வண்ணம் எதிர்கால வெற்றிகளின் நறுமணத்தை நுகர்ந்தவாறு திரும்பிச் செல்கிறோம். எனவே நிச்சயமாக இதுவொரு மகத்துவ மிக்க வெற்றியாகும்.

இதே குறைஷியர்கள் உஹது மற்றும் அகழ் ஆகிய போர்களில் எப்படி உங்களுக்கு எதிராகப் படையெடுத்து வந்தார்கள்? என்ற அந்தக் காட்சிகளை நீங்கள் மறந்து விட்டீர்களா? இந்தக் களம் விரிவாக இருந்தும் உங்களுக்கு குறுகலாகி விட்டிருந்தது. உங்களுடைய கண்கள் திறந்த வண்ணம் இருந்து விட்டன. துக்கம் தொண்டையை அடைத்தது. ஆனால், இன்று இதே குறைஷியர்கள் உங்களுடன் அமைதி மற்றும் சமரசத்திற்கான உடன்படிக்கை செய்கிறார்கள்.

ஸஹாபா பெருமக்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நாங்கள் புரிந்து கொண்டோம்; நாங்கள் புரிந்து கொண்டோம். தங்களது பார்வை சென்றடைந்த இடம் வரை எங்களுடைய பார்வைகள் சென்றடைவதில்லை. ஆனால், உண்மையிலேயே இந்த உடன்படிக்கை நமக்கு ஒரு மாபெரும் வெற்றியாகும் என்பதை இப்பொழுது நாங்கள் புரிந்து கொண்டோம்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

ஹுதைபியா நிகழ்விற்கு மேலான இறைவன் தெளிவான வெற்றி என்று பெயரிட்டுள்ளான். மேலும்,

إِنَّا فَتَحْنَا لَكَ فَتْحًا مُّبِينًا

என்று கூறியுள்ளான். அந்த வெற்றி பெரும்பாலான ஸஹாபிகளுக்கும் மறைவாக இருந்தது. இன்னும் சொல்வதாயின், சில நயவஞ்சகர்கள் மற்றும் மார்க்கத்தை விட்டுச் செல்வதற்குக் காரணமாக அமைந்தது. ஆனால், உண்மையில் அது தெளிவான வெற்றியாக இருந்தது. அதில் முன் வந்த விஷயங்கள் ஆழ்ந்து தொலைநோக்குப் பார்வையுடன் பார்க்க வேண்டியவையாக இருந்தன.

அல்லாமா பலாஸரீ இவ்வாறு எழுதுகிறார்: சமரசத்திற்குப் பல விளைவுகளும் கனிகளும் வெளிப்பட்டன. இறுதியில் கண்ணியத்திற்குரிய மக்கா மாநகரம் வெற்றிக் கொள்ளப்பட்டது. மக்கத்தினர் அனைவரும் இஸ்லாத்தில் நுழைந்து விட்டனர். மக்கள் கூட்டங் கூட்டமாக இஸ்லாத்தில் நுழையத் துவங்கினார்கள். அதற்குக் காரணம், இந்த சமரசத்துக்கு முன்பு மக்கள் ஒருவரை ஒருவர் சந்திக்க முடியாமல் இருந்தது. அவர்களுக்கு முன்பு ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பற்றிய விஷயம் வெளிப்படையாக இருக்கவில்லை. தெளிவாக அன்னாருடைய நிலைகளை எடுத்துரைக்கக் கூடிய நபர் எவரும் அவர்களிடத்தில் வந்ததில்லை.

ஹுதைபியா சமரச உடன்படிக்கை செய்யப்பட்டதும், மக்கள் ஒருவர் மற்றவரை சந்தித்துக் கொண்டார்கள். இணை வைப்பாளர்கள் மதீனாவுக்கு வந்தார்கள். முஸ்லிம்கள் மக்காவுக்குச் சென்றார்கள். அவர்கள் தம் வீட்டு மக்கள், நண்பர்கள் மற்றும் நலம் விரும்பிகளைச் சந்தித்தார்கள். அவர்களிடமிருந்து கண்ணியத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்களின் வழிகாட்டல்கள் மற்றும் அற்புதங்கள் பற்றி கேட்டறிந்தார்கள். நபித்துவத்தின் அடையாளங்களை அறிந்தார்கள். அன்னாருடைய அழகிய வாழ்க்கை வரலாறு மற்றும் அழகிய முன்மாதிரியைப் பற்றித் தெரிந்து கொண்டார்கள். பல விஷயங்களைக் கண்களால் கண்டார்கள். அவர்களது உள்ளங்கள் ஈமான் பக்கம் சாய்ந்தன. எதுவரை என்றால், பல மக்கள் ஈமான் கொள்வதில் விரைந்தார்கள். ஹுதைபியா சமரச உடன்படிக்கைக்கும் மக்கா வெற்றிக்கும் நடுவில் இஸ்லாத்தை ஏற்றார்கள். மற்றவர்களுக்கு இஸ்லாத்தின் பக்கம் ஆர்வம் பிறந்து விட்டிருந்தது. எதுவரை என்றால், (மக்கா வெற்றி) அன்று அனைவரும் ஈமான் கொண்டார்கள். அரேபியர்கள், குறைஷியர்கள் இஸ்லாத்தை ஏற்பதற்காகத்தான் காத்துக் கொண்டிருந்தார்கள். குறைஷியர்கள் ஈமான் கொண்டதும் அரேபியா முழுவதும் ஈமான் கொண்டது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹுதைபியா சமரச உடன்படிக்கை செய்தபோது, ஹுதைபியா சமரச உடன்படிக்கையின் அருளுக்குரிய கனிகளில் ஒன்று இதுவும் ஆகும். அதாவது மக்களுக்கு அன்னாரிடம் வருவதற்கான வாய்ப்பு கிடைத்தது. அவர்கள் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறியவற்றைக் கேட்டார்கள். எனவே

அவர்களில் நூற்றுக்கணக்கானோர் முஸ்லிம்கள் ஆகிவிட்டனர்.

அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறியவற்றைக் கேட்காத வரை, அவர்களுக்கும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கும் இடையில் ஒரு சுவர் தடையாக இருந்தது. அது அன்னாருடைய அழகை, எழிலை அவர்கள் அறிந்து கொள்ளாமல் இருக்கச் செய்தது. மற்றவர்கள் பொய்யர் என்று கூறி வந்தது போன்றே, அவர்களும் கூறிவந்தார்கள். மேலும், ஹுஸூர் (ஸல்) அவர்கள் கொண்டு வந்திருந்த அந்த அருட்கள் மற்றும் பரக்கத்துகள் ஆகியவற்றிலிருந்து இழப்பிற்குரியவர்களாக இருந்தார்கள். காரணம் தொலைவில் இருந்தார்கள். ஆனால், அந்தத் திரை அகன்றதும் அருகில் வந்து கண்டதும், கேட்டதும் அந்த இழப்பிற்குரிய நிலை இருக்கவில்லை. மேலும் நற்பேறு பெற்றவர்களின் குழுவில் இணைந்து விட்டார்கள். மற்றவை இனி எடுத்துரைக்கப்படும். இன்ஷா அல்லாஹ்!

தமிழாக்கம்
மவ்லவி
அத்தாவுல் முஃக்னீ

* * * * * *

## காதியான் ஜல்ஸா - 2024
(முதல் பக்கத் தொடர்ச்சி.......)

மாணவர் ஜாமிஆ அஹ்மதிய்யா அவர்கள் சூரா ஆலி இம்ரானுடைய வசனங்கள் 160 முதல் 164 வரை திலாவத் செய்வதற்கு நற்பேறு பெற்றார். அதன் பிறகு தஃப்ஸீரே ஸகீரிலிருந்து மதிப்பிற்குரிய மவ்லானா நூருத்தீன் ஸாஹிப் அவர்கள் அவற்றின் மொழியாக்கத்தை எடுத்துரைத்தார்கள். பின்னர் இயக்கத்தின் முரப்பி மதிப்பிற்குரிய ஸயீத் அஹ்மத் ஸாஹிப் மல்கானா அவர்களும், துபைர் அஹ்மத் ஷமீம் ஸாஹிப் அவர்களும், ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களின் ஏ பாத்ஷா மக்கி வ மத்னீ ஸய்யிதுல் வரா என்ற கவிதை வரிகளை அழகிய குரலில் கூட்டுப் பாடலாக படித்தார்கள்.

இந்த அமர்வின் முதல் சொற்பொழிவை மதிப்பிற்குரிய மவ்லானா முஹம்மத் இனாம் கௌரி ஸாஹிப், நாஸிர் ஆஃலா ஸதர் அஞ்சுமன் அஹ்மதிய்யா காதியான் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பரிசுத்த வாழ்க்கை என்ற தலைப்பில் நிகழ்த்தினார்கள். இந்த அமர்வின் இரண்டாவது சொற்பொழிவை ஸீரத் ஸஹாபா ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) மற்றும் ஹஸ்ரத் மிர்ஸா ஷரீஃப் அஹ்மத் ஸாஹிப் (ரலி) என்ற தலைப்பில் மதிப்பிற்குரிய மவ்லவி தன்வீர் அஹ்மத் ஸாஹிப் நாஸிர் அவர்கள் நிகழ்த்தினார்கள். இதன் பிறகு, கூட்டத்தின் தலைவர் அவர்களின் அனுமதியுடன் முதல் நாளின் இரண்டாவது அமர்வு சீருடனும், சிறப்புடனும் நிறைவுறு பெற்றது. இன்று வெள்ளிக் கிழமை இந்திய நேரப்படி மாலை சரியாக 6.30 மணியளவில் எல்லா மஸ்ஜித்களிலும், வீடுகளிலும் கூட்டாக ஹுஸூர் அன்வர் அய்யதஹுல்லாஹ் அவர்களின் குத்பா பேருரை நேரடி ஒளிபரப்பில் பார்க்கப்பட்டது. **(தொடரும்.....)**

.

* * * * * * *

## குத்பா பேருரை 06.12.24
(14-ம் பக்கத் தொடர்ச்சி......)

பெருமானார் (ஸல்) அவர்களின் சொற்கள் அபூ பஸீர் மீது எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதாகும். அதற்கு அபூ பஸீர் என்ன பொருள் எடுத்துக் கொண்டார் என்பதாகும். ஆகவே அதைக் குறித்து அதே அறிவிப்பில் இவ்வாறு வருகிறது:

فَلَمَّا سَمِعَ ذٰلِكَ عَرَفَ اَنَّهٗ سَيَرُدُّهٗ اِلَيۡهِمۡ

பொருள்: அபூ பஸீர் பெருமானார் (ஸல்) அவர்களின் இந்த சொற்களை கேட்டபோது, பெருமானார் (ஸல்) அவர்கள் தம்மை இப்பொழுது மறுபடியும் மக்காவாசிகளிடம் திருப்பி அனுப்பி வைத்து விடுவார்கள் என்று புரிந்து கொண்டார்கள். ஆகவே அன்னார் ஒளிந்து மறைந்து அங்கிருந்து வெளியேறி விட்டார்.

அந்தோ பரிதாபம்! எந்த நபரைப் பார்த்து இந்த சொற்கள் கூறப்பட்டதோ அதற்கு அவர், பெருமானார் (ஸல்) அவரகள் தம் செயலை விரும்பவில்லை என்றும், அன்னார் (ஸல்) தம்மை மக்காவை நோக்கி திருப்பி அனுப்பி வைத்து விடுவார்கள் என்றும் பொருள் கொண்டுள்ளார். ஆனால், 1300 ஆண்டுகளுக்குப் பிறகு வந்த கருணை உள்ளம் கொண்ட இவர்கள் இதற்கு பொருள் கொடுக்கும்போது, முஹம்மத் (ஸல்) அவர்கள் அபூ பஸீரிடம் தனி குழுவை உருவாக்கி போர் செய்யும்படி தூண்டி விட்டார்கள் என்று கூறுவது எந்த அளவு மத துவேஷம் என்று பாருங்கள்; அநீதிக்கும் ஓர் எல்லை இருக்க வேண்டும்.

நீதியை நிலை நாட்டுவதாக வாதிப்பவர்களின் இந்த இரட்டை வேட நிலைதான் எப்பொழுதுமே உலகில் குழப்பத்தை ஏற்படுத்தி இருக்கிறது. தற்காலத்திலும் இதே குழப்பங்கள்தான் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. அல்லாஹ் இன்றும் உலகத்திற்கு - குறிப்பாக முஸ்லிம்களுக்கு அறிவை வழங்குவானாக. தஜ்ஜாலிய குழப்பங்களில் இருந்தும் காப்பாற்றுவானாக!

தமிழாக்கம்
மவ்லவி
A.P.A. தாரிக் அஹ்மது

* * * * * * *

## குத்பா பேருரை 13.12.24
(16ம் பக்கத் தொடர்ச்சி......)

நபவியின் வளாகத்திலேயே ஒரு தூணில் கட்டி கைதியாக வைக்கும்படி அன்னார் (ஸல்) ஸஹாபிகளுக்கு கட்டளை வழங்கினார்கள். அதன் மூலம் அன்னாருடைய சபை மற்றும் முஸ்லிம்களின் தொழுகைகள் போன்றவை ஸுமாமஃவின் கண்களுக்கு முன்னால் நிகழ வேண்டும்; மேலும் அவருடைய உள்ளம் இந்த ஆன்மிகக் காட்சிகளால் தாக்கத்திற்குள்ளாகி இஸ்லாத்தின் பக்கம் சாய்ந்து விட வேண்டும் என்பது அன்னாருடைய நோக்கமாக இருந்தது.

ஆக, அவர் இவ்வாறு கட்டி வைக்கப்பட்டார். அவர் தாக்கமடையாமலும், கோபத்திலேயே இருக்கும் வண்ணமும் அவர் கட்டி வைக்கப்படவில்லை. மாறாக,மென்மையுடனும், மெதுவாகவுமே அவர் கட்டி வைக்கப்பட்டார். ஒரு கைதி கை கால்களை அசைக்கும் வண்ணம், அவர் கட்டி வைக்கப்பட்டார்.

இந்த நாட்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒவ்வொரு நாளும் காலை நேரத்தில் ஸுமாமஃவிற்கு அருகில் செல்வார்கள்; மேலும், ஸுமாமஃவே! தற்போது உமது எண்ணம் என்ன? என்று நிலைமையை விசாரிப்பார்கள். முஹம்மதே! (ஸல்) தாங்கள் என்னை கொலை செய்து விட்டால் தங்களுக்கு அதற்கான உரிமை உள்ளது; ஏனெனில், என் மீது கொலை குற்றம் இருக்கின்றது; ஆனால், தாங்கள் கருணை காட்டினால் தாங்கள் என்னை நன்றியுடையவனாகக் காண்பீர்கள்; மேலும் தாங்கள் ஈட்டுத் தொகை பெற விரும்பினால் பின்னர் நான் ஈட்டுத் தொகை கொடுப்பதற்கும் ஆயத்தமாக இருக்கின்றேன் என்று ஸுமாமஃ பதில் அளித்து வந்தார். மூன்று நாட்கள் வரை இதே கேள்வி பதில் நிகழ்ந்து கொண்டிருந்தது. இறுதியில், மூன்றாம் நாள், ஸுமாமஃவின் கட்டை அவிழ்த்து அவரை விடுதலை செய்து விடுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சுயமே ஸஹாபிகளுக்கு கட்டளை வழங்கினார்கள். மேலும் ஸுமாமஃவும் வேகவேகமாக பள்ளிவாசலில் இருந்து வெளியே சென்று விட்டார். இனி அவர் தனது நாட்டிற்கு திரும்பி சென்று விடுவார் என்று அநேகமாக ஸஹாபிகள் புரிந்திருப்பார்கள். ஆனால், ஸுமாமஃவின் உள்ளம் வெற்றிக் கொள்ளப்பட்டு விட்டது என்பதை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் புரிந்துவிட்டிருந்தார்கள்.

அப்போது அவர் மீது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பரிசுத்த ஆற்றலின் தாக்கம் ஏற்பட்டுவிட்டிருந்தது. மேலும் அவ்வாறே விளைவும் வெளிப்பட்டிருந்தது.

தொடர்ந்து எழுதப்பட்டுள்ளது: ஆக, அவர் அருகில் இருந்த ஒரு தோட்டத்திற்கு சென்றார்; மேலும் அங்கு குளித்து சுத்தமாகிவிட்டு திரும்பி வந்தார்; மேலும், வந்த உடனேயே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கரங்களில் முஸ்லிமாகி விட்டார். அதன் பிறகு அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் இவ்வாறு வேண்டினார்:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! ஒருநேரம் இவ்வாறு இருந்தது; அதாவது அப்போது முழு உலகிலும் தங்களின் இருப்பின் மீதும், தங்களுடைய மார்க்கத்தின் மீதும், தங்களுடைய நகரத்தின் மீதும் எனக்கு கடும் பகைமை இருந்தது. ஆனால், தற்போது எனக்கு தங்களின் இருப்பும், தங்களின் மார்க்கமும், தங்களுடைய நகரமும் எல்லாவற்றையும் விட மிகவும் நேசத்திற்குரியதாக ஆகிவிட்டது. அந்த நாள் மாலை வழக்கம்போல் ஸுமாமஃவிற்காக உணவு வந்தபோது, அவர் சிறிதளவு உணவை உண்டு விட்டு மீதம் வைத்து விட்டார். அதனால், ஸஹாபிகள் ஆச்சரியம் கொண்டனர்;

**(இதன் தொடர்ச்சி அடுத்த இதழில்...)**

தமிழாக்கம்
மவ்லவி A.அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * *



# ஜுமுஆ பேருரை

**ஹுதைபியா சமாதான உடன்படிக்கையின் போது நிலவிய சூழல்களும் & சம்பவங்களும் மற்றும் அது தொடர்பாக கிறிஸ்தவ வரலாற்றாசிரியர்கள் புறமிருந்து செய்யப்படும் ஆட்சேபனைகளுக்கு தெளிவான பதில்களும்**

அந்த உடன்படிக்கையில் பெண்களை விதிவிலக்காக கருதுவது என்பது உடன்படிக்கைக்கு (முற்றிலும்) உட்பட்டது மட்டுமின்றி அறிவுபூர்வமாகவும், நீதியின் அடிப்படையிலும் அவசியமானதாக இருந்தது. ஆகவே நியாயமான முறையிலும், நீதியின் அடிப்படையிலும் பெருமானார் (ஸல்) அவர்கள் உம்மு குல்ஸூம் அவர்களுக்கு சாதகமாக தீர்ப்பை கூறினார்கள். அவர்களின் உறவினர்களை திருப்பி அனுப்பி விட்டார்கள். இறைவனும் அன்னாருடைய தீர்ப்புக்கு ஆதரவு வழங்கினான்

பெருமானார் (ஸல்) அவர்கள் அபூபஸீரை அழைத்துக் கொண்டு திரும்பிச் செல்லுமாறு கட்டளையிட்டார்கள். அபூ பஸீர் ஒப்பாரி வைக்க ஆரம்பித்தார்; கூக்குரலிட்டார். நான் முஸ்லிம் ஆவேன்; இவர்கள் மக்காவில் எனக்கு நெருக்கடி கொடுப்பார்கள். இஸ்லாத்தை விட்டு விலகுவதற்காக என் மீது கடுமை காட்டுவார்கள் என்று கூறினார். உடன்படிக்கையின் காரணமாக நாம் ஒன்றும் செய்ய முடியாத நிலையில் இருக்கின்றோம்; உங்களை இங்கு வைத்துக் கொள்ள முடியாது; நீங்கள் இறை விருப்பத்திற்காக பொறுமையை மேற்கொண்டால் இறைவன் உங்களுக்கென்று ஏதேனும் வழியை திறப்பான். ஆனால், நாங்கள் நிர்ப்பந்தத்திற்கு ஆளாகி இருக்கின்றோம். எவ்வகையிலும் நாம் உடன்படிக்கையை மீற முடியாது என்று அன்னார் ( ஸல்) கூறிவிட்டார்கள் மேலும் அவரிடம் நீங்கள் அந்த மக்களுடன் சென்று விடுங்கள்; நீங்கள் பொறுமையுடனும், உறுதியுடனும் இஸ்லாத்தில் நிலைபெற்றிருந்தால் இறைவன் உங்களுக்காகவும், உங்களைப் போன்ற பிற ஆதரவற்ற முஸ்லிம்களுக்காகவும் அவனே இரட்சிப்பிற்கான ஒரு வழியை திறந்து வைப்பான் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 06 டிசம்பர் 2024** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 140**3** ஆண்டு **ஃபத்ஹ்** மாதம் **06ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

. ஹுதைபியா சமாதான உடன்படிக்கை பற்றிய குறிப்பில் இன்றும் மேற்கொண்டு சில விவரங்களை எடுத்துக் கூறுவேன். ஸீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் இந்த சம்பவத்தை எடுத்துக் கூறியுள்ளார்கள். அன்னார் (ரலி) இவ்வாறு எழுதுகிறார்கள்:

ஒப்பந்தங்களில் சில குறைபாடுகளும் இருந்து விடுவதுண்டு. அவை சில சமயங்களில் மிகவும் முக்கியமான விளைவுகளுக்கும் காரணமாக அமைந்து விடுகின்றன. ஹுதைபியா சமாதான உடன்படிக்கையிலும் ஒரு குறைபாடு இருந்தது. அது என்னவென்றால், அதில் முஸ்லிம் ஆண்கள் திரும்பிச் செல்வது குறித்து தெளிவாக குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு முஸ்லிம்களுடன் வந்து சேர்கின்ற மக்கத்துப் பெண்களைப் பற்றி எவ்வித குறிப்பும் அதில் இடம்பெறவில்லை. ஆகவே வெகு விரைவிலேயே எவ்வாறான சூழ்நிலை உருவானது என்றால், மக்கத்து காஃபிர்கள் மீது இந்த குறைபாடு தெளிவாக வெளிப்பட்டு விட்டது. இந்த ஒப்பந்தம் ஏற்பட்டு கொஞ்ச காலம்தான் கடந்திருக்கும். மக்காவில் இருந்து சில முஸ்லிம் பெண்கள் காஃபிர்களின் கையிலிருந்து தப்பி மதீனா வந்தடைந்து விட்டார்கள். அவர்களில் முதலாவதாக உம்மு குல்ஸூம் அவர்கள் வந்தடைந்தார்கள். இவர்கள் மக்காவை சார்ந்த மரணமடைந்திருந்த உக்பா பின் அபீ முஅய்த் எனும் ஒரு முஷ்ரிக் தலைவரின் மகள் ஆவார். மேலும் இவர்கள் தம் தாய்வழி முறைப்படி ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்களின் சகோதரியாகவும் இருந்தார்கள். உம்மு குல்ஸூம் அவர்கள் மிக துணிச்சலுடன் நடந்தே மதீனா வந்தடைந்து விட்டார்கள். இவ்வளவு நீண்ட பயணத்தை அப்பெண்மணி நடந்தே கடந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜராகி தாம் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதை வெளிப்படுத்தினார்கள். ஆனால், அவர்களுக்குப் பின்னாலேயே அவர்களின் இரு நெருங்கிய உறவினர்களும் அவர்களை பிடிப்பதற்காக வந்து சேர்ந்தார்கள். அப்பெண்மணியை திரும்ப அனுப்ப வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர்.

அவர்களின் வாதம் என்னவாக இருந்தது? என்றால், உடன்படிக்கையில் ஆண்கள் என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருந்தாலும் உண்மையில் அந்த உடன்படிக்கை பொதுவானதாக உள்ளது. ஆண்கள், பெண்கள் இருவருக்கும் பொதுவானதாகும் என்றார்கள். ஆனால், உம்மு குல்ஸூம் அவர்களின் வாதம் என்னவாக இருந்தது? என்றால், உடன்படிக்கையில் உள்ள (பயன்படுத்தப்பட்டுள்ள) சொற்கள் மட்டுமின்றி பெண் என்பவள் ஒரு பலவீனமான படைப்பு ஆவாள். ஆண்களுக்கு எதிரில் அவளை பார்க்கும் போது அவள் கீழ்ப்படிந்த நிலையில் இருக்கிறாள். ஆகவே தம்மை திருப்பி அனுப்பி விடுவது என்பது ஆன்மிக மரணத்தின் வாய்க்குள் தள்ளிவிடுவதற்கும், இஸ்லாத்தை விட்டு இழப்பிற்குரியவளாக ஆக்குவதற்கும் சமமாகும் என்று பெண்களின் விவகாரத்தில் விதிவிலக்கான தம் வாதத்தை எடுத்து வைத்தார்கள். ஆகவே அந்த உடன்படிக்கையில் பெண்களை விதிவிலக்காக கருதுவது என்பது உடன்படிக்கைக்கு (முற்றிலும்) உட்பட்டது மட்டுமின்றி அறிவுபூர்வமாகவும், நீதியின் அடிப்படையிலும் அவசியமானதாக இருந்தது. ஆகவே நியாயமான முறையிலும், நீதியின் அடிப்படையிலும் பெருமானார் (ஸல்) அவர்கள் உம்மு குல்ஸூம் அவர்களுக்கு சாதகமாக தீர்ப்பை கூறினார்கள். அவர்களின் உறவினர்களை திருப்பி அனுப்பி விட்டார்கள். இறைவனும் அன்னாருடைய தீர்ப்புக்கு ஆதரவு வழங்கினான். அந்நாட்களில் ஒரு திருக்குர்ஆன் வசனம் இறங்கியது. அதன் பொருள் என்னவென்றால்,

ஒரு பெண் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதாக வாதம் செய்தவாறு மதீனாவுக்கு வந்தால் அவரை நன்கு பரிசோதித்துப் பாருங்கள்; அவர் நல்லியல்பு கொண்ட பெண்மணி ஆவார் என்றால் களங்கமற்றவராக நிரூபணம் ஆனார் என்றால் அவரை காஃபிர்களின் பக்கம் ஒருபோதும் திருப்பி அனுப்ப வேண்டாம். ஆனால், அவள் மணம் முடித்தவளாக இருந்தால் அவளுடைய மஹரை அவளின் முஷ்ரிக் கணவனுக்கு கண்டிப்பாக செலுத்தி விடுங்கள்.

அதற்குப் பிறகு மக்காவை விட்டு வெளியேறி ஒரு பெண் மதீனாவை வந்தடையும் போதெல்லாம் அவள் நன்கு பரிசோதிக்கப்படுவாள். அவளுடைய எண்ணம், கலப்பற்றத் தன்மை ஆகியவை நன்கு பரிசோதிக்கப்பட்டு வந்தது. எந்தப் பெண்கள் நல்லெண்ணம் கொண்டவர்களாகவும், தூயவர்களாகவும் நிரூபணம் ஆனார்களோ, மேலும் அவர்களுடைய ஹிஜ்ரத்தில் எவ்வித உலக ஆசையோ அல்லது தன்னலமோ குறிக்கோளாக இல்லாமல் இருப்பது தெரிய வந்தால் அந்த பெண் மதீனாவிலேயே வைக்கப்பட்டார். அவர் திருமணம் முடிந்தவராக இருக்கும்பட்சத்தில் அவருடைய மஹர் அவருடைய கணவனுக்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டு வந்தது. அதற்கு பிறகு அந்த பெண்களுக்கு முஸ்லிம்களை திருமணம் செய்வதில் எவ்வித தடையும் இல்லாமல் இருந்தது.

உடன்படிக்கையின் நிபந்தனையுடன் சம்பந்தப்பட்ட இன்னொரு சம்பவத்தை பற்றிய குறிப்பும் காணக் கிடைக்கிறது. ஹஸ்ரத் அபூபஸீர் (ரலி) அவர்களின் சம்பவம் ஆகும். அதனுடைய விபரத்தில் இவ்வாறு வருகிறது: ஹுதைபியா உடன்படிக்கையில் இருந்த ஒரு நிபந்தனை என்னவென்றால், குறைஷியர்களில் ஒருவர் முஸ்லிமாகி மதீனாவுக்கு வந்துவிட்டால் மதீனா மக்கள் அவருக்கு புகலிடம் கொடுக்க மாட்டார்கள்.திருப்பி அனுப்பி விடுவார்கள். ஆனால், ஒரு முஸ்லிம் இஸ்லாத்தை விட்டு விலகி மக்காவை நோக்கி சென்றால் மக்காவாசிகள் அவரை திரும்ப அனுப்ப மாட்டார்கள்.

வெளிப்படையில் இந்த நிபந்தனை முஸ்லிம்களுக்கு அவமதிப்பாக கருதப்பட்டது.இதனால் பல முஸ்லிம்களின் உள்ளம் கவலையடைந்திருந்தது. எந்த அளவுக்கென்றால், அந்த சூழ்நிலையில் எடுக்கப்பட்ட அந்த முடிவின் காரணமாக நாம் நம் உரிமையை விட்டுக் கொடுக்கிறோம் என மக்களுடைய உள்ளங்கள் எரிந்து கொண்டிருந்தபோது, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் போன்ற மகத்துவமிக்க, புரியும் திறன் கொண்ட ஸஹாபியும் கூட கோபமும், நிம்மதியின்மையும் அடைந்தார்கள். ஆனால், வெகுவிரைவிலேயே சூழ்நிலை எப்படி மாறியது? என்றால் அந்த நிபந்தனை குறைஷியர்களுக்கு பலவீனத்தையும் முஸ்லிம்களுக்கு வலிமையயும் தருவதற்கு காரணமாக அமைந்தது என்று தெரிய வந்தது.

ஏனெனில், பெருமானார் (ஸல்) அவர்கள் ஆரம்பத்திலேயே கூறிவிட்டார்கள். அதாவது ஒரு முஸ்லிம் வெறுப்படைந்து மதீனாவை விட்டு செல்கிறார் என்றால் அவர் அசுத்தமான அங்கம் ஆவார் எவர். நயவஞ்சகராக இருப்பாரோ அல்லது எவர்களின் உள்ளத்தில் கோணல் தன்மை இருந்ததோ அவர்களே இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு பின்னர் விட்டு விடுவார்கள்.அவர்களே முர்தத் ஆனார்கள். ஆகவே யாராவது செல்கிறார் என்றால் அவர் சென்று கொள்ளட்டும்! அவரை மதீனாவுக்கு அழைத்து வரவேண்டிய எந்த அவசியமும் கிடையாது. ஏனெனில், அவர் அசுத்தமான ஓர் அங்கமாவார். அவர் துண்டிக்கப்படுவதே சிறந்தது என்று அன்னார் கூறிவிட்டார்கள். ஆனால், ஒருவர் உண்மையான உள்ளத்துடன் முஸ்லிமாகி மக்காவிலிருந்து வெளியேறினார் என்றால், அவருக்கு மதீனாவில் இடம் கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும் அவர் எங்கிருந்தாலும் இஸ்லாத்தைப் பலப்படுவத்துவதற்கு காரணியாக இருப்பார். இறுதியில் அல்லாஹ் அவருக்கென்று ஏதேனும் ஒரு வழியை திறந்து கொடுப்பான் என்றார்கள்.

இந்தக் கண்ணோட்டம் வெகு விரைவிலேயே தம் உண்மைத்தன்மையை வெளிப்படுத்தியது. ஏனெனில், பெருமானார் (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு வந்து அதிக காலம் கூட ஆகி இருக்காது. அபூ பஸீர் உத்பா பின் உஸைத் சக்ஃபீ என்ற மக்காவாசி – இவர் பனூ ஸுஹ்றா என்ற கோத்திரத்தின் நட்புக் கோத்திரத்தை சார்ந்தவராக இருந்தார். இவர் முஸ்லிமாகி மக்காவாசிகளின் காவலில் இருந்து தப்பித்து மதீனா வந்தடைந்தார். குறைஷியர்கள் (அவரைப் பிடித்து வர) அவருக்குப் பின்னால் இருவரை அனுப்பி வைத்தனர். பெருமனார் (ஸல்) அவர்களிடம் வந்து அபூ பஸீரை உடன்படிக்கையின் நிபந்தனைக்கேற்ப தங்கள் கைகளில் ஒப்படைக்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை வைத்தனர்.

பெருமானார் (ஸல்) அவர்கள் அபூபஸீரை அழைத்துக் கொண்டு திரும்பிச் செல்லுமாறு கட்டளையிட்டார்கள். அபூ பஸீர் ஒப்பாரி வைக்க ஆரம்பித்தார்; கூக்குரலிட்டார். நான் முஸ்லிம் ஆவேன்; இவர்கள் மக்காவில் எனக்கு நெருக்கடி கொடுப்பார்கள். இஸ்லாத்தை விட்டு விலகுவதற்காக என் மீது கடுமை காட்டுவார்கள் என்று கூறினார். உடன்படிக்கையின் காரணமாக நாம் ஒன்றும் செய்ய முடியாத நிலையில் இருக்கின்றோம்; உங்களை இங்கு வைத்துக் கொள்ள முடியாது; நீங்கள் இறை விருப்பத்திற்காக பொறுமையை மேற்கொண்டால் இறைவன் உங்களுக்கென்று ஏதேனும் வழியை திறப்பான். ஆனால், நாங்கள் நிர்பந்தத்திற்கு ஆளாகி இருக்கின்றோம். எவ்வகையிலும் நாம் உடன்படிக்கையை மீற முடியாது என்று அன்னார் ( ஸல்) கூறிவிட்டார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் ஒப்பந்தத்தை எந்த அளவு பேணி வந்தார்கள் என்று பாருங்கள்; ஒன்றும் செய்ய இயலாத அபூபஸீர் அம்மக்களுடன் திரும்பிச் சென்றார். மக்கா சென்றடைந்த பிறகு தம் மீது பலவிதமான அக்கிரமங்கள் செய்யப்படுமே! என்றும், இஸ்லாம் எனும் அருளை மறைத்து வைக்க வேண்டியது வருமே! என்றும், எந்த அளவுக்கென்றால், பலவந்தத்தின் காரணமாகவும் கடுமையின் காரணமாகவும் அதை கை கழுவ வேண்டியது வந்தாலும் வரலாம் என்றும் அவர் நடுங்கிக் கொண்டிருந்தார். ஆகவே அக்குழு மதீனாவில் இருந்து சில மைல் தூரத்தில் மக்கா செல்லக் கூடிய வழியில் இருந்த ஸூல் ஹுலைபா என்ற இடத்தை அடைந்தபோது, அபூ பஸீர் அவர்கள் சந்தர்ப்பம் பார்த்து அந்த குழுவின் தலைவனாக இருந்தவனை கொன்றுவிட்டார்கள். இன்னொருவனையும் கொல்ல நெருங்கி விட்டார்கள். ஆனால், அவன் தம் உயிரை காப்பாற்றிக் கொண்டு எப்படி தப்பி ஓடினான் என்றால் அபூ பஸீர் –க்கு முன்பே மதீனா சென்றடைந்து விட்டான். அவனுக்கு பின்னாலே அபூ பஸீர் அவர்களும் மதீனா சென்றடைந்தார். அவன் மதீனா சென்றடைந்த போது பெருமானார் (ஸல்) அவர்கள் பள்ளிவாசலில் இருந்தார்கள். அச்சமுற்ற அவனுடைய நிலையைக் கண்டபோது, இவருக்கு பெரும் பயம் தொற்றிக் கொண்டுள்ளது என்று கூறினார்கள். அப்போது அவர் நடுங்கியவாறு அன்னாரிடம், என்னுடைய கூட்டாளி கொல்லப்பட்டு விட்டார். நானும் மரணத்தின் வாயில் நிற்கிறேன் என்றார்.

அன்னார் (ஸல்) அவனிடமிருந்து சம்பவத்தை கேட்டறிந்து ஆறுதல் வழங்கினார்கள். அப்பொழுது அபூ பஸீரும் கையில் வாளேந்தியவாறு அங்கு வந்தடைந்தார். வந்த உடனேயே பெருமானார் (ஸல்) அவர்களிடம், அல்லாஹ்வின் தூதர் (ஸல்)அவர்களே! தாங்கள் என்னை குறைஷியர்களின் கையில் ஒப்படைத்து விட்டீர்கள். தங்களுடைய பொறுப்பு முடிந்துவிட்டது. ஆனால், இறைவன் அநியாயக்கார சமுதாயத்தில் இருந்து எனக்கு இரட்சிப்பை வழங்கி இருக்கின்றான். இப்போது என்னைக் குறித்து தங்களுக்கு எந்த பொறுப்பும் இல்லை என்று கூறியபோது பெருமானார் (ஸல்) அவர்கள்,

وَيْلُ اُمِّهٖ مُسْعِرُ حَرْبٍ لَّوْ كَانَ لَهٗ اَحَدٌ

என்று கூறினார்கள்.

பொருள்: இவரின் தாய்க்கு கேடு உண்டாகட்டும்!

இது அரபி சொல் வழக்கு ஆகும். இது நேரடி பொருள் கொள்ளப்படாது. மாறாக, ஒருவரை ஏசுவதற்காகவோ அல்லது வியப்பை வெளிப்படுத்துவதற்காகவோ அல்லது கோபத்தை வெளிப்படுத்தும் சந்தர்ப்பத்திலோ கூறப்படும் வாக்கியம் ஆகும். இவர் போர் நெருப்பை மூட்டுகிறாரே!. யாராவது இவருக்கு புரிய வையுங்கள் என்று கூறினார்கள்.

அன்னார் இதைக் கூறியபோது அபூ பஸீர் புரிந்து கொண்டார். எவ்வாறாயினும், பெருமானார் (ஸல்) அவர்கள் ஒப்பந்தத்தின் காரணமாக திரும்பிச் செல்லுமாறு கூறுவார்கள் என்று புரிந்து கொண்டார்கள்.

இதைக் குறித்து புஹாரீயில் வரும் சொற்கள் என்னவென்றால்,

فَلَمَّا سَمِعَ ذٰلِكَ عَرَفَ اَنَّهٗ سَيَرُدُّهٗ اِلَيْهِمْ

பொருள்: அபூ பஸீர் பெருமானார் (ஸல்) அவர்களின் இந்த சொற்களை கேட்டபோது பெருமானார் (ஸல்) அவர்கள் தம்மை இப்பொழுது மறுபடியும் மக்காவாசிகளிடம் திருப்பி அனுப்பி வைத்து விடுவார்கள் என்று புரிந்து கொண்டார். ஆகவே அவர் ஒளிந்து மறைந்து அங்கிருந்து புறப்பட்டுவிட்டார். மக்காவில் அவருடைய ஆன்மிக மற்றும் பௌதீக மரணம் இரண்டும் தென்பட்டது. ஆகவே அவர் மக்காவுக்கு செல்லாமல் செங்கடல் பகுதியை விட்டு விலகி சீஃபுல் பஹ்ர் ஐ சென்றடைந்தார். அபூபஸீர் தனியாக ஒரு புகலிடத்தை உருவாக்கிக் கொண்டார் என்று மக்காவில் இருந்த மறைமுகமாக முஸ்லிமாகியிருந்த மக்களுக்கும், பலவீனமான முஸ்லிம்களுக்கும் தெரிய வந்தபோது, அவர்களும் கொஞ்சம் கொஞ்சமாக மக்காவிலிருந்து வெளியேறி சீஃபுல் பஹ்ர் ஐ வந்தடைந்தார்கள். அவ்வாறு வந்தவர்களுள் மக்கத்து தலைவர்களுள் ஒருவரான சுஹைல் பின் அம்ர் அவர்களின் மகன் அபூ ஜந்தலும் ஒருவர் ஆவார்.

பெருமானார் (ஸல்) அவர்கள் ஹுதைபியாவிலிருந்து அவரை திரும்ப அனுப்பியிருந்தார்கள். அவரைப் பற்றிய குறிப்பு கடந்த குத்பாவில் கூறப்பட்டது. கொஞ்சம் கொஞ்சமாக இந்த மக்களுடைய எண்ணிக்கை 70 ஐ நெருங்கிவிட்டது.சில அறிவிப்புகளின் அடிப்படையில் 300 வரை ஆகிவிட்டது. இவ்வாறு மதீனாவைத் தவிர இன்னோர் இஸ்லாமிய அரசும் உருவாகி விட்டது.அது மார்க்க ரீதியாக பெருமானார் (ஸல்) அவர்களுக்கு உட்பட்டிருந்தது. ஆனால், அரசியல் ரீதியாக தனிப்பட்டதாகவும், சுதந்திரமானதாகவும் இருந்தது. ஒருபுறம், ஹிஜாஸின் எல்லைக்குட்பட்ட பகுதியில் தனியாக சுதந்திரமாக ஒரு அரசமைப்பு இருப்பது குறைஷியர்களுக்கு ஆபத்தாக இருந்தது. இன்னொரு புறம் சீஃபுல் பஹ்ர் இல் இருந்த முஹாஜிர்கள் மக்கத்து குறைஷியர்களால் கடும் காயமடைந்தவர்களாக இருந்தார்கள். ஆகவே அதிக காலம் கூட கடந்திருக்காது. ஆரம்ப காலத்தில் மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்தவர்களுக்கும் மக்கத்து குறைஷியர்களுக்கும் இடையிலான தொடர்பு எவ்வாறு ஆனதோ ஏறக்குறையை அதேபோன்று சீஃபுல் பஹ்ர் உடைய முஹாஜிர்களுக்கும் மக்கத்து குறைஷியர்களுக்கும் இடையில் உருவாகி விட்டது. மதீனாவிலிருந்து சிரியா செல்லக் கூடிய வழிக்கு மிகவும் அருகில் சீஃபுல் பஹ்ர்

இருந்தது. ஆகவே குறைஷிய குழுக்களுடன் அந்த முஹாஜிர்களுக்கு மோதல் ஏற்பட ஆரம்பித்தது. இந்த புதிய போர் குறைஷியர்களுக்கு பெரும் அபாயத்தை உருவாக்கியது.

முதல் விஷயம் என்னவென்றால், ஏற்கனவே நடந்து முடிந்திருந்த போரின் காரணமாக குறைஷியர்கள் பலவீனம் அடைந்திருந்தார்கள். இரண்டாவது விஷயம் என்னவென்றால், முன்பைக் காட்டிலும் இப்போது அவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்திருந்தது. இப்போது இவர்களுக்கெதிரில் சீஃபுல் பஹ்ர் இல் இருந்த இஸ்லாமிய அரசின் தலைமை அபூ பஸீர் மற்றும் அபூ ஜந்தல் போன்ற உயிரை தியாகம் செய்ய தயாராக இருந்தவர்களின் வசம் இருந்தது. அவர்களிடத்தில் ஈமானின் புத்தம் புதிய உத்வேகமும், அவர்கள் மீது கடந்த காலத்தில் செய்யப்பட்டிருந்த அநீதியின் கசப்பான நினைவுகள் ஆகியவற்றின் காரணமாக எந்தவொரு மோதலைப் பற்றியும் அஞ்சாத மின்சார ஆற்றலால் அவர்கள் நிரம்பியிருந்தார்கள். இதன் விளைவாக கொஞ்ச காலத்திலேயே குறைஷியர்கள் துணிவிழந்து விட்டார்கள். மேலும் அபூ பஸீர் அவர்களுடைய குழுவின் தாக்குதல்களின் காரணமாக நெருக்கடிக்கு ஆளாகி பெருமானார் (ஸல்) அவர்களின் சமூகத்தில் தூதுவரை அனுப்பி கோரிக்கை வைத்தார்கள். அன்னாரிடம் தம் உறவு முறையை நினைவூட்டி, சீஃபுல் பஹ்ர் இன் முஹாஜிர்களை மதீனாவுக்கு அழைத்து அவர்களை தம் ஆட்சியுடன் இணைத்துக் கொள்ளுமாறு வேண்டுகோள் வைத்தார்கள். அத்துடன், மக்காவிலிருந்து தப்பி மதீனாவுக்கு வரக் கூடிய புதிய முஸ்லிம்களுக்கு புகலிடம் கொடுக்கக் கூடாது என்று எழுதப்பட்டிருந்த ஹுதைபியா சமாதான உடன்படிக்கையின் நிபந்தனையை அவர்களாகவே ரத்து செய்து விட்டார்கள். அவர்களை உங்களிடம் வைத்துக் கொள்ளலாம் என்று கூறிவிட்டனர்.

பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த கோரிக்கையை ஏற்றுக் கொண்டார்கள். குறைஷியர்கள் மனமுவந்து அந்த உடன்படிக்கையில் திருத்தம் செய்துள்ளார்கள். ஆகவே நீங்கள் இப்போது மதீனா வந்து விட வேண்டும் என்று அபூ பஸீர் மற்றும் அபூ ஜந்தல் ஆகியோருக்கு ஒரு கடிதம் மூலமாக அன்னார் (ஸல்) செய்தி அனுப்பினார்கள். பெருமானார் (ஸல்) அவர்களின் தூதுவர் அங்கு சென்றபோது அபூ பஸீர் அவர்கள் உடல்நலம் குன்றி படுத்த படுக்கையாக இருந்தார்கள். அவர்களின் நிலைமை மோசமாகிக் கொண்டிருந்தது. அபூ பஸீர் அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய கடிதத்தை மிக ஆர்வத்துடன் தம் கையில் வாங்கி வைத்துக் கொண்டார்கள். கொஞ்ச நேரத்திற்குப் பிறகு அந்நிலையிலேயே உயிரை விட்டார்கள். அவர்கள் இறந்து போய் இருந்தார்கள்.

அதற்குப் பிறகு அபூ ஜந்தல் மற்றும் அவருடைய தோழர்கள் தம்முடைய துணிவான வீரமுள்ள தலைவரை சீஃபுல் பஹ்ரிலேயே அடக்கம் செய்து மகிழ்ச்சி மற்றும் துக்கம் ஆகிய இரு உணர்வுகளும் கலந்த நிலையில் பெருமானார் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜரனார்கள்.

துக்கம் எதற்கென்றால், அந்த சம்பவத்தின் ஹீரோவாக இருந்த அவர்களின் வீரமிகு தலைவரான அபூ பஸீர் அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களை சந்திக்க இயலாமல் ஆகிவிட்டார்கள் என்பதால், மகிழ்ச்சி எதற்கென்றால் அவர்கள் தம்முடைய எஜமானரின் பாதங்களை வந்தடைந்து விட்டார்கள் என்பதாலும் குறைஷியர்களின் கொலைத் தாக்குதல்களிலிருந்து இரட்சிப்பு பெற்று விட்டார்கள் என்பதாலும் ஆகும்.

முஸ்லிம் அல்லாத வரலாற்றாசிரியர்கள் வழக்கம்போல் வரலாற்றை திரித்து வளைத்து இஸ்லாத்தின் மீது ஆட்சேபனை செய்துள்ளார்கள். ஹுதைபியா சமாதான உடன்படிக்கை தொடர்பாகவும் கிறிஸ்தவ வரலாற்றாசிரியர்களின் ஆட்சேபனைகள் காணக் கிடைக்கின்றன.

இது தொடர்பாக ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதுகிறார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் வாழ்க்கையில் நடந்த எந்தவொரு முக்கிய சம்பவத்தைக் குறித்தும் கிறிஸ்தவ வரலாற்றாசிரியர்கள் ஆட்சேபனை இன்றி விட்டது கிடையாது. இந்த கோட்பாட்டின் கீழ்தான் ஹுதைபியா சமாதான உடன்படிக்கையும் வருகிறது. சில கூடுதல் ஆட்சேபனைகள் மற்றும் முக்கியமற்ற ஆட்சேபனைகளை தவிர்த்து நாம் பார்க்கும் போது ஹுதைபியா சமாதான உடன்படிக்கை தொடர்பாக கிறிஸ்தவ எழுத்தாளர்கள் இரு ஆட்சேபனையை செய்துள்ளார்கள்.

முதலாவது, பெருமானார் (ஸல்) அவர்கள் ஹுதைபியா சமாதான உடன்படிக்கையின் நிபந்தனையிலிருந்து பெண்களை விதிவிலக்காக ஆக்கிக் கொண்டது. ஒப்பந்தத்தின் நிபந்தனைகளின் ஒளியில் ஆகுமானது கிடையாது. ஏனெனில், ஒப்பந்தத்தின் சொற்கள் பொதுவானதாக இருந்தது. அதில் ஆண்கள் பெண்கள் அனைவரும் வருவார்கள் என்பதாகும்.

இரண்டாவது ஆட்சேபனை என்னவென்றால், அபூ பஸீர் அவர்களின் சம்பவத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் உடன்படிக்கையின் ஆன்மாவை முறித்து விட்டார்கள். இன்னும் கூறுவதென்றால், பெருமானார் (ஸல்) அவர்கள் அபூ பஸீரிடம் சூசகமாக நீங்கள் மக்காவுக்கு திரும்பிச் செல்லாமல் ஒரு தனிக் கூட்டத்தை உருவாக்கி செயல்படுமாறு கூறினார்கள். இது அந்த ஒப்பந்தத்திற்கு மாற்றமானது ஆகும் என்று கூறுகிறார்கள்.

இந்த ஆட்சேபனைகளுக்கான பதில் தொடர்பாக நினைவில் வைக்க வேண்டிய முதல் விஷயம் என்னவென்றால், இந்த உடன்படிக்கை மக்கத்து குறைஷியர்களுடன் செய்யப்பட்டிருந்தது. மக்கத்து குறைஷியர்கள் எப்படிப்பட்டவர்கள் என்றால், அவர்கள் இஸ்லாத்தின் ஆரம்பம் முதலேயே பெருமானார் (ஸல்) அவர்களுக்கு எதிராக மும்முரமாக செயல்பட்டுக் கொண்டிருந்தார்கள். உடன்படிக்கை எழுதப்பட்டுக் கொண்டிருக்கும்போதும் கூட அவர்களின் பிரதிநிதிகள் சின்ன சின்ன விஷயங்களிலும் ஆட்சேபனை செய்வதும் ஏளனம் செய்வதும் அந்த சமுதாயத்தின் பழக்கமாக இருந்தது. தொலை தூரத்தில் வசிக்கின்ற அந்நிய சமுதாயமாக அவர்கள் இருக்கவில்லை. மாறாக, அது பெருமானார் (ஸல்) அவர்களின் சமுதாயம் தான். அனைத்து சூழ்நிலைகளைப் பற்றியும் அவர்கள் முழுமையாக அறிந்திருந்தார்கள்.

உடன்படிக்கை குறைஷியர்களுடன் செய்யப்பட்டிருந்தது. அவர்கள் அந்நியர்கள் ஒன்றும் கிடையாது. பெருமானார் (ஸல்) அவர்களின் சமுதாயத்து மக்கள் ஆவார்கள். ஒவ்வொரு விஷயத்தை பற்றியும் அவர்கள் அறிந்திருந்தார்கள். மிகவும் விளக்கமாக அவர்கள் நிபந்தனை வகுத்தார்கள். ஆகவே ஆண்கள், பெண்கள் இருவரையும் குறிக்கும் என்று கூறுவது சரியல்ல. ஆண்கள், பெண்கள் இருவரையும் குறிக்குமா? குறிக்காதா? என்பது அவர்களுக்கும் தெரியும்.

அத்துடன் உடன்படிக்கையினுடைய நிபந்தனைகளின் அனைத்து விபரமும் அவற்றின் முழுமையான பின்னணியும் அவர்களின் கண்களுக்கு முன்னால் இருந்தது. ஆகவே எவர்களுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டதோ அவர்கள் மக்கத்து குறைஷியர்கள் ஆவார்கள். அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் இந்த நடவடிக்கை தொடர்பாக எவ்வித ஆட்சேபனையும் செய்யாதிருக்கும்போது, ஒப்பந்தத்திற்கு எதிரானதாக அவர்கள் இதை கருதாமல் இருக்கும்போது 1300 ஆண்டுகளுக்குப் பின்னால் வந்தவர்களின் பார்வையிலோ பல நுணுக்கமான விபரங்கள் மறைந்திருக்கும்போது அத்துடன் அந்த ஒப்பந்தத்தின் பின்னணியைக் குறித்தும் இவர்களுக்கு முழுமையான அறிவும் இல்லாமல் இருக்கும்போது இவர்களுக்கு ஆட்சேபனைக்கான உரிமை எங்கிருந்து கிடைத்தது? அந்த இணை வைப்பாளர்களே ஆட்சேபனை செய்யாதபோது, இஸ்லாத்தின் மீது ஆட்சேபனை செய்யும் இன்றைய காலத்து மேற்கத்திய வரலாற்றாசிரியர்கள் அதைப் பற்றி ஆட்சேபனை செய்கிறார்கள்.

இது எப்படிப்பட்ட விஷயம் என்றால், வாதி சோம்பேறி, சாட்சி சுறுசுறுப்பு (அதாவது சம்பந்தப்பட்டவர் அக்கறை காட்டாமல் இருக்கும்போது சம்பந்தப்படாதவர் ஆர்வமாக இருப்பது) என்பது போன்று உள்ளது. எவர்களுடன் இந்த முழு சம்பவமும் நடந்ததோ அவர்களோ இதை சரி என்று கூறி அமைதியாக இருந்தார்கள். ஆனால், 1300 ஆண்டுகளுக்குப் பிறகு வரக் கூடியவர்கள் ஆரவாரம் செய்வது போல் உள்ளது. திருக்குர்ஆன், ஹதீஸ் மற்றும் அரேபிய வரலாறு ஆகியவை மக்கத்து காஃபிர்களும் அரேபியாவின் இதர காஃபிர்களும் பெருமானார் (ஸல்) அவர்கள் மற்றும் இஸ்லாத்திற்கெதிராக செய்த ஆட்சேபனைகளால் நிரம்பி காணப்படும்போது முஸ்லிம்கள் ஹுதைபியா சமாதான உன்படிக்கைக்கு எதிராக நடந்து கொண்டார்கள் என்று எங்குமே குறிப்பிடப்படவில்லையே! ஒரு நீண்ட காலம் வரை எவருமே இவ்வாறு ஆட்சேபனை செய்யவில்லையே? ஆட்சேபனை செய்ய



வேண்டும் என்று இன்றுதான் இவர்களுக்கு தெரிய வந்ததா?

அது மட்டுமின்றி இந்த வலுவான சாட்சியின் மூலமாகவும் நிரூபணமாவது என்னவென்றால், ஹுதைபியா சமாதான உடன்படிக்கைக்குப் பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் ரோமானிய கைஸர் மன்னருக்கு தப்லீஃக் கடிதம் எழுதியபோது, அந்நேரத்தில் மக்கத்து தலைவரான அபூ ஸுஃப்யான் பின் ஹர்பும் தற்செயலாக சிரியாவுக்கு சென்றிருந்தார். ரோமானிய பேரரசனான ஹெராக்கிலியஸ், அவரை தம் அரசவைக்கு வரவழைத்து பெருமானார் (ஸல்) அவர்களைக் குறித்து சில கேள்விகளைக் கேட்டார். அதில் ஒரு கேள்வி உம் சமுதாயத்தின் அந்த நபித்துவ வாதி எப்போதாவது ஏதேனும் வாக்குறுதியை மீறியிருக்கிறாரா? என்பதும் ஆகும். நிராகரிப்பாளர்களின் தலைவராகவும், இஸ்லாத்தின் கடும் எதிரியாகவும் இருந்த அபூ ஸுஃப்யான் இந்தக் கேள்விக்கு பதிலளிக்கும் போது கூறிய சொற்கள் என்னவென்றால்,

முஹம்மத் (ஸல்) அவர்கள் எப்போதும் உடன்படிக்கையை மீறியது கிடையாது. ஆனால், இப்பொழுது நாங்கள் அவருடன் ஓர் உடன்படிக்கை செய்துள்ளோம். அந்த உடன்படிக்கையின் காலக்கெடுவுக்குள் அவர் எவ்வாறு நடந்து கொள்வார்? என்பது தெரியாது என்று கூறினார்.

அபூஸுஃப்யான் கூறுகிறார்: அந்த முழு பேச்சிலும் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு எதிராக ஹெராக்கிலியஸ் அரசனுடைய உள்ளத்தில் சந்தேகத்தை ஏற்படுத்தும் வகையில் இந்த விஷயத்தைத் தவிர வேறு எதையும் என்னால் கூறமுடியவில்லை.

அபூஸுஃப்யான் மற்றும் ஹெராக்கிலியஸ்-க்கு இடையில் நிகழ்ந்த இந்த உரையாடல் ஹுதைபியா சமாதான உடன்படிக்கைக்கு பிறகு உடனே நிகழ்ந்த சம்பம் ஒன்றும் கிடையாது. மாறாக, பெருமானார் (ஸல்) அவர்கள் சார்பாக ஹெராக்கிலியஸ் மன்னர் பெயரில் ஒரு தப்லீஃக் கடிதம் ஆயத்தம் செய்யப்பட்டு அனுப்பப்படுதல், பிறகு ஹெராக்கிலியஸ் சார்பாக அரசவை கூட்டப்படுதல், அபூ ஸுஃப்யானை தேடிப்பிடித்து தம் அரசவைக்கு வரவழைத்தல் போன்ற விஷயங்களுக்கு கண்டிப்பாக (போதிய) காலம் எடுத்திருக்கும். ஏனெனில், அக்காலத்தில் பயணமும் எளிதானதாக இருக்கவில்லை. இந்த இடைப்பட்டக் காலத்தில் அபூ பஸீர் அவர்கள் மதீனாவுக்கு தப்பி ஓடி வந்து, மதீனா வந்தடைந்த நிகழ்வுகளும் நடந்திருக்கக் கூடிய சாத்தியங்கள் உள்ளன. எனவேதான் அனைத்து வரலாற்றாசிரியர்களும் அபூ பஸீர் மற்றும் உம்மு குல்ஸும் ஆகியோரின் சம்பவங்களை முன்பு நிகழ்ந்ததாகவும் ரோமானிய கைஸருடைய கடித சம்பவத்தை பிறகு நிகழ்ந்ததாகவும் எடுத்துரைத்துள்ளார்கள். ஆனால், அவ்வாறிருந்தும் அபூஸுஃப்யான் ஹெராக்கிலியஸ் மன்னனுடைய அரசவையில் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு எதிராக இவர் உடன்படிக்கை மீறினார் என்ற குற்றச்சாட்டை எடுத்து வைக்க முடியவில்லை. ஆனால், ஏதாவது வாய்ப்பு கிடைத்திருந்தால் அதை விட்டு விடக் கூடாது என்று அவர் விரும்பியதை அவருடைய சொற்கள் வெளிப்படுத்துகின்றன. ஆனால், 1300 வருடங்களுக்குப் பிறகு வரக் கூடிய மதிப்பீட்டாளர்கள் பெருமானார் (ஸல்) அவர்கள் மீது உடன்படிக்கையை மீறினார்கள் என்று ஆட்சேபனை செய்யும்போது இறையச்சம் இல்லாமல் நடந்து கொள்கிறார்கள். இவர்கள் மீது பெரும் பரிதாபமே!

பிறகு இந்த ஆட்சேபனைகளின் விளக்கத்திற்குள் நாம் செல்வோம் என்றால், அதன் பலவீனம் இன்னும் அதிகமாக வெளிப்படுவதை காண முடியும். உதாரணமாக, முதல் ஆட்சேபனை என்னவென்றால், ஆணும், பெண்ணும் இருவருமே அந்த உடன்படிக்கையின் சொற்களுக்கு உட்பட்டவர்கள் என்றும், ஆனால், பெருமானார் (ஸல்) அவர்கள் கட்டாயப்படுத்தி பெண்களை விதிவிலக்காக ஆக்கி விட்டார்கள் என்றும் கூறப்படுகிறது.

ஏற்கனவே நாம் கூறியது போன்று இந்த ஆட்சேபனை இது முற்றிலும் தவறானதும், அடிப்படையற்றதும் ஆகும். ஏனெனில், சரியான அறிவிப்புகளில் எடுத்துரைக்கப்பட்ட உடன்படிக்கையின் சொற்கள் மிகத் தெளிவாக கூறுவதென்னவென்றால், நிபந்தனையின் சொற்கள் ஆண்களை மட்டுமே குறிக்குமேயன்றி ஆண்கள், பெண்கள் இருவரையும் குறிக்காது. ஏற்கனவே நாம் கூறியது போன்று ஸஹீஹ் புஹாரீயில் உடன்படிக்கையின் சொற்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. அதில் வருகிறது:

لَا يَاْتِيْكَ مِنَّا رَجُلٌ وَاِنْ كَانَ عَلٰى

دِيْنِكَ اِلَّا رَدَدْتَهٗ اِلَيْنَا

பொருள்: எங்களில் இருந்து எந்தவோர் ஆணும் உங்களிடம் வந்தாலும் அவர் முஸ்லிமாக இருந்தாலும் நீங்கள் அவரை எங்கள் பக்கம் திருப்பி அனுப்பி வைக்க வேண்டும்.

இவ்வாறு தெளிவாகவும் சந்தேகத்திற்கிடமின்றியும் சொற்கள் இருந்தும் கூட உடன்படிக்கையில் எழுதப்பட்ட சொல் ஆண், பெண் இருவரையும் குறிக்கும் என்று ஆட்சேபனை செய்வது அநீதி மட்டுமின்றி மிகவும் உட்சபட்ச மோசடியும் ஆகும். வரலாற்றின் சில அறிவிப்புகளில் உடன்படிக்கை வாசகத்தில் ரஜுல் (ஆண்கள்) என்ற சொல் குறிப்பிடப்படவில்லை ; மாறாக பொதுவான சொல்தான் குறிப்பிடப்பட்டுள்ளது. அது ஆண், பெண் ஆகிய இருவரையும் குறிக்கும் என்று கூறப்படும் என்றால் அதற்கான பதில் என்னவென்றால், முதல் விஷயம் வலுவான அறிவிப்புகளுக்கே முன்னுரிமை இருப்பதாக நாம் கருதுவோம். ஸஹீஹான அறிவிப்புகளில் ரஜுல் (ஆண்) என்ற சொல் வரும்போது அந்த சொல்லையே சரியானதாக கருத வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அதுமட்டுமின்றி, வரலாற்று அறிவிப்புகளில் வருகின்ற சொற்களை பார்க்கும்போது அவை நாம் எடுத்துரைத்த விளக்கத்திற்கு வலு சேர்ப்பதை காண முடிகிறது. உதாரணமாக, மிகப் பிரபல்யமான, மிகவும் அறியப்படுகின்ற வரலாற்று நூலான ஸீரத் இப்னு ஹிஷாமில்

مَنْ اَتٰى مُحَمَّدًا مِنْ قُرَيْشٍ بِغَيْرِ

اِذْنِ وَلِيِّهٖ رَدَّهٗ عَلَيْهِمْ

என்ற சொற்கள் இடம் பெற்றுள்ளன. அதாவது எவர் குறைஷியர்களிலிருந்து முஹம்மத் (ஸல்) அவர்களிடத்தில் தமது காப்பாளரின் அனுமதி இல்லாமல் செல்வாரோ அவர் குறைஷியர்களின் பக்கம் திருப்பி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

இந்த அரபி சொற்களில் ஆண் என்ற சொல் வெளிப்படையாக எடுத்துரைக்கப்படவில்லை என்றாலும் அரபி மொழியைப் பற்றி ஆரம்ப அறிவைக் கொண்டவருக்குக் கூட அரபி மொழியில் மற்ற மொழிகளைப் போன்று அல்லாமல் ஆண், பெண் என்று இருவருக்கும் தனித்தனியான சொற்றொடரும், குறிச் சொற்களும் பயன்படுத்தப்படுவதை அறிவார். மேற்கூறப்பட்ட வாக்கியத்தில் ஆரம்பம் முதல் இறுதி வரை ஆண்களுக்கான சொற்றொடரும், ஆண்களுக்கான குறிச்சொற்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆகவே உடன்படிக்கை மொழிகளின் விளக்கவுரைக்கான சட்டத்தை கருத்தில் கொண்டு பார்க்கும்போது இந்த வாக்கியத்தில் கூறப்பட்ட சொல் ஆண்களை மட்டுமே குறிக்கும் ; ஆண்கள் பெண்கள் இருவரையும் குறிக்காது என்பதை புரிந்து கொள்ள முடிகிறது. சில சந்தர்ப்பங்களில் பொதுவான வாக்கியத்தில் ஆண்பால் சொற்றொடரை பேசுவதால் அது ஆண் பெண் இருவரையும் குறிக்கிறதுதான்; ஆனால் நாம் எந்த வாக்கியத்தைப் பற்றி விவாதிக்கிறோமோ அதில் அவ்வாறான எந்த வாக்கியமும் இல்லை என்பது வெளிப்படை. அது ஒப்பந்தம் எழுதப்பட்ட வாக்கியம் ஆகும். அதற்கு சட்டத்திற்கான அந்தஸ்து இருந்தது. இன்னும் கூறுவதென்றால், அதை விடவும் உயரிய அந்தஸ்து இருந்தது. ஏனெனில், அதில் உள்ள ஒவ்வொரு சொல்லும் சிந்தித்து யோசித்து வைக்கப்படுகிறது. அதில் பயன்படுத்தப்படும் சொற்கள் இரு பிரிவினரின் குறுக்கு கேள்விகள் மற்றும் ஒப்புதலுக்குப் பிறகு பயன்படுத்தப்படுகின்றன. ஆகவே இவ்வாறான வாக்கியங்களில் வரையறைக்குட்பட்ட, குறிப்பானதைக் குறிக்கின்ற பொருளைத்தான் எடுத்துக் கொள்ள முடியும். எவ்வாறு காஃபிர்களின் பிரதிநிதிகள் குறுக்கு கேள்விகள் கேட்டார்கள் என்ற விபரத்தை கடந்த குத்பாவில் பார்த்து விட்டோம்.

ஆகவே எவ்வாறிருப்பினும், இந்த உடன்படிக்கையில் உள்ள சொல் ஆண்களை மட்டும்தான் குறிக்கும்; ஆண்கள், பெண்கள் இருவரையும் குறிக்காது என்ற முடிவுதான் இதிலிருந்து கிடைக்கிறது.

அதுமட்டுமின்றி ஏற்கனவே கூறப்பட்டது போன்று பெண் பலவீனமான இனம் ஆவாள். பொதுவாக அவள் தம் கணவன் அல்லது உறவினராக இருக்கும் ஆண்களின் கருணையின் கீழ் இருப்பாள். அவளை திரும்ப அனுப்பி வைத்தல் என்பது அவள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு தம் கைகளால் அவளை குஃப்ர் மற்றும் ஷிர்க்கில் அனுப்பி வைப்பதாகும். இது கருணை மற்றும் பரிவு ஆகியவற்றுக்கு எதிரானது மட்டுமின்றி நீதி மற்றும்

Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

➢ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➢ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➢ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➢ ALL VEHICLE INSURANCE, COURIER
NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

நியாயத்தை விட்டு விலகியதும் ஆகும். ஓர் ஆண் அனுப்பி வைக்கப்படும்போது மக்கத்து காஃபிர்கள் அவருக்கு பல்வேறு விதமான தண்டனைகளையும், துன்பங்களையும் கொடுப்பார்கள் என்ற அபாயம் இருந்தபோதிலும் ஆண் - ஆண்தானே. அவர் தம் துன்பங்களை எதிர்கொள்வதற்கு அதிக ஆற்றல் கொண்டவராக இருக்கின்ற அதேவேளையில் அவசியத்திற்கேற்ப அவர் எங்கேயாவது ஒளிந்து கொண்டோ அல்லது தப்பி ஓடியோ அல்லது கூட்டத்தை திரட்டியோ தம்மை காப்பாற்றிக் கொள்வதற்கு ஏதாவது ஒரு வழியை தேடிக் கொள்வார். உதாரணமாக, அபூ பஸீர் அவர்கள் செய்தது போன்று ஆனால் ஓர் ஆதரவற்ற பெண்ணால் என்ன செய்து விட முடியும்?இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஒன்று, நிர்பந்தத்திற்கு ஆளாகி அவள் இஸ்லாத்தை விட்டு விலகி விடுவாள் அல்லது மரணத்தை மேற்கொள்வாள். இவ்வாறான சூழ்நிலையில் பெருமானார் (ஸல்) அவர்களைப் போன்ற கருணையும், பரிவும் கொண்ட ஒருவர் உதவியும் ஆதரவும் அற்ற முஸ்லிம் பெண்களை அநீதியாளர்களான காஃபிர்களின் பக்கம் திருப்பி அனுப்புவது முற்றிலும் சாத்தியமற்ற விஷயமாகும். ஆகவே எது மேற்கொள்ளப்பட்டதோ அது உடன்படிக்கையின் சொற்களுக்கு உட்பட்டு முற்றிலும் சரியானதாக இருந்தது மட்டுமின்றி நீதி, நியாயம், கருணை மற்றும் பரிவு ஆகியவற்றின் அடிப்படையிலும் முற்றிலும் பொருத்தமானதாகவும், சரியானதாகவும் இருந்தது. அநீதிக்குள்ளான ஆதரவற்ற பெண்களை பாதுகாக்கும் ஏற்பாடு விஷயத்திலும் கூட ஆட்சேபனை செய்யக் கூடியவர்களின் ஏளனம் செய்யும் நாவுகள் விட்டு வைக்கவில்லை. மிகவும் பரிதாபத்திற்குரிய, வெட்கப்பட வேண்டிய இந்த செயலைத் தவிர வேறு ஒன்றும் ஆட்சேபனை செய்யக் கூடியவர்களின் பங்கில் வரவில்லை.

இரண்டாவது ஆட்சேபனை, அபூ பஸீர் அவர்களின் சம்பவத்துடன் தொடர்புடையது ஆகும். ஆனால், சிந்தித்து பார்த்தால் இந்த ஆட்சேபனையும் முற்றிலும் அற்பமானதும் பலவீனமானதும் ஆகும் என்று தெரிய வருகிறது. மக்கத்து காஃபிர்களில் இருந்து எந்த நபர், அதாவது எந்த ஆண் மதீனாவுக்கு தப்பி வந்தாலும் அவர் முஸ்லிமாக இருந்தாலும் அவருக்கு மதீனாவில் புகலிடம் கொடுக்கப்படாது; அவர் திரும்ப அனுப்பி வைக்கப்படுவார் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் உடன்படிக்கை செய்திருந்தார்கள்.

(ஆனால் கேள்வி என்னவென்றால், பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த உடன்படிக்கைக்கு எதிராக நடந்து கொண்டார்களா? ஒருபோதும் கிடையாது; ஒருபோதும் கிடையாது; அன்னார் (ஸல்) அந்த ஒப்பந்தத்தை எந்த அளவுக்கு முழுமையாகவும், மகத்தான முறையிலும் பேணி நடந்தார்கள் என்றால், இதற்கு ஒப்பான ஒரு முன்மாதிரியை எடுத்துக் காட்ட உலகத்தால் இயலாது.

சிந்தித்துப் பாருங்கள்; அபூ பஸீர் இஸ்லாத்தின் உண்மையை ஏற்றுக் கொண்டு மக்காவிலிருந்து தப்பி ஓடினார். காஃபிர்களின் அநீதியில் இருந்து பாதுகாப்பாக இருப்பதற்கும், தம் ஈமானை காப்பாற்றுவதற்காகவும் ஒளிந்து மறைந்து மதீனாவை வந்தடைந்தார். ஆனால், அவருடைய அநீதி செய்யக் கூடிய உறவினர்களும் அவருக்குப் பின்னாலேயே வந்தடைந்தார்கள். வாளின் அழுத்தத்தினால் இஸ்லாத்தின் உண்மையை விட்டு அவரை விலக்கி வைப்பதற்காக பலவந்தமாக அவரை திரும்ப அழைத்துச் செல்ல நினைத்தனர். அதனால் இந்த இரு தரப்பும் பெருமானார் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜரானார்கள். அபூ பஸீர் மெல்லிய குரலிலும், அச்சமுற்ற தொனியிலும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே, இறைவன் எனக்கு இஸ்லாம் எனும் அருளை வழங்கியுள்ளான். நான் மக்காவுக்கு திரும்பிச் செல்வதால் எப்படிப்பட்ட துன்பமான, ஆபத்தான வாழ்க்கையை எதிர்கொள்ள நேரிடும் என்பதை தாங்கள் அறிவீர்கள். இறைவனுக்காக என்னை திருப்பி அனுப்பாதீர்கள் என்று கேட்டுக் கொண்டார். ஆனால், இதற்கெதிராக அபூ பஸீரின் உறவினர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம், எங்களுடைய எந்தவோர் ஆணும் மதீனாவுக்கு வந்தாலும் அவரை திருப்பி அனுப்ப வேண்டும் என்று தங்களுக்கும் எங்களுக்கும் இடையில் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டுள்ளது என்று கோரிக்கை வைத்தனர். அபூ பஸீரின் துன்பமும், தம் ஸஹாபிகளின் தன்மானமும் பெருமானார் (ஸல்) அவர்களின் கண் முன்னே இருந்தது. அன்னாருடைய உணர்வுகளும் அன்னாருடைய உள்ளத்தில் பொங்கிக் கொண்டிருந்தன. ஆனால், அமானிதம் மற்றும் நம்பிக்கையின் உருவமாக திகழ்ந்த அன்னார் (ஸல்) தம் வாக்குறுதியில் மலையைப் போன்று உறுதியாக நின்றவாறு, அபூ பஸீரே, நாம் அவர்களுக்கு வாக்குறுதி கொடுத்திருப்பதை தாங்கள் அறிவீர்கள்; நமது மார்க்கத்தில் வாக்கு மீறுதல் ஆகுமானதன்று என்று கூறினார்கள்.

பாருங்கள்; ஒருவருடைய உயிர் பற்றிய கேள்வி எழுகிறது; ஆனால், பெருமானார் (ஸல்) அவர்களோ நமது மார்க்கத்தில் வாக்கு மீறுதல் ஆகுமானதன்று என்று கூறுகிறார்கள்.

நாம் சின்னச் சின்ன வாக்குறுதியையும் கூட மீறுகிறோம். நம்முடைய ஈமானிய நிலை எவ்வாறு உள்ளது? என்று நாம் சிந்திக்க வேண்டும்.

பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள், அவரிடம் நீங்கள் அந்த மக்களுடன் சென்று விடுங்கள்; நீங்கள் பொறுமையுடனும், உறுதியுடனும் இஸ்லாத்தில் நிலைபெற்றிருந்தால் இறைவன் உங்களுக்காகவும், உங்களைப் போன்ற பிற ஆதரவற்ற முஸ்லிம்களுக்காகவும் அவனே இரட்சிப்பிற்கான ஒரு வழியை திறந்து வைப்பான் என்று கூறினார்கள்.

அந்த இரட்சிப்பிற்கான வழி திறந்ததை நாம் கண்டோம்.

நபியவர்களின் இந்த வழிகாட்டல்களைக் கேட்ட அபூ பஸீர் மக்காவாசிகளுடன் திரும்பிச் சென்று விட்டார்கள். மக்கா செல்லும் வழியில் தம்மை சிறை பிடித்துச் சென்றவர்களுடன் ஏற்பட்ட சண்டையில் அவர் வெற்றி பெற்று மறுபடியும் திரும்பி வந்தபோது, பெருமானார் (ஸல்) அவர்கள் அவரைப் பார்த்த உடனேயே, கோபத்துடன் وَيْلُ أُمِّهِ مُسْعِرُ حَرْبٍ لَوْ كَانَ لَهُ أَحَدٌ என்று கூறினார்கள்.

பொருள்: இவரின் தாய்க்கு கேடு உண்டாகட்டும்! இவரோ போரின் நெருப்பை மூட்டுகிறாரே! யாராவது இவருக்கு புரிய வைத்தால் நன்றாக இருக்குமே!

இந்த சொற்களை கேட்ட உடனேயே பெருமானார் (ஸல்) அவர்கள் தம்மை என்னவானாலும் திரும்பி அனுப்பி வைத்து விடுவார்கள் என்று உறுதியாக அவருக்கு புரிந்து விட்டது. அவர் மதீனாவை விட்டு ஒளிந்து மறைந்து வெளியேறி வெகு தொலைவில் இருந்த தனியான வேறொரு இடத்தை தமது தங்குமிடமாக ஆக்கிக் கொண்டார்.

இப்போது இந்த அனைத்து சம்பவங்களையும் நீதியின் கண்கொண்டு பார்க்கும்போது, இதில் பெருமானார் (ஸல்) அவர்களின் தலையீடு ஏதும் இல்லை என்பதையும், அன்னாருக்கெதிராக எவ்வித ஆட்சேபனையும் எழ முடியாது என்பதையும் தெரிந்து கொள்ளலாம்.

உண்மை என்னவென்றால், அன்னார் (ஸல்) தம் உணர்வுகளை காயப்படுத்தியவாறு உடன்படிக்கையை நிறைவேற்றினார்கள். ஒருமுறை அல்ல ; இருமுறை அபூ பஸீர் அவர்களை திரும்ப அனுப்பி வைத்தார்கள். எப்படிப்பட்ட மகத்துவமான சொற்களைக் கூறி திரும்ப அனுப்பி வைத்தார்கள் என்றால், உலக வரலாற்றில் இதற்கு ஒப்பான ஒன்றை நம்மால் காண முடியாது. பெருமானார் (ஸல்) அவர்கள் தம் உணர்வுகளை காயப்படுத்தியது மட்டுமின்றி தமது ஸஹாபிகளின் உணர்வுகளையும், அபூ பஸீர் உடைய உணர்வுகளையும் காயப்படுத்தியவாறு உடன்படிக்கையை நிறைவேற்றினார்கள். பிறகு அபூ பஸீரே மக்காவாசிகளிடமிருந்து விடுதலையாகி வேறொரு இடத்திற்கு சென்று விட்டார் என்றால் பெருமானார் (ஸல்) அவர்கள் மீது ஆட்சேபனை செய்வதற்கு இதில் என்ன உள்ளது?

மக்காவிலிருந்து தப்பி ஓடக் கூடிய நபர் எங்கிருந்தாலும் அவரை மக்காவுக்கு கொண்டு சேர்க்கின்ற பொறுப்பு பெருமானார் (ஸல்) அவர்களை சாரும். அன்னார் (ஸல்) அதற்கு கட்டுப்பட்டவர் ஆவார்கள் என்று கூறும் வகையில் உடன்படிக்கையில் ஏதேனும் நிபந்தனை உள்ளதா என்ன? அந்தோ பரிதாபம், இஸ்லாத்தின் எதிரிகள் எந்த விஷயத்திலும் இஸ்லாத்துடன் நீதியுடன் நடந்து கொள்ளவில்லை.

அபூ பஸீரால் உருவாக்கப்பட்டிருந்த அந்த புகலிடத்திற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் கட்டளையை அனுப்பி வைத்து, நீங்கள் மதீனாவுக்கு திரும்பிச் செல்லுங்கள் என்று கூறாத காரணத்தினால், வெளிப்படையாக உடன்படிக்கையின் சொற்களை அன்னார் (ஸல்) முறிக்கவில்லை என்றாலும் அதன் ஆன்மாவை முறித்து விட்டார்கள் என்று ஆட்சேபனை செய்யப்படும் என்றால் இதுவும் ஒரு பலவீனமான ஆட்சேபனையேயன்றி வேறில்லை. இந்த ஆட்சேபனையும் முற்றிலும் அறிவீனமான ஆட்சேபனையாகும். ஆட்சேபனையின் சொற்களும் அந்த சொற்களின் ஆன்மாவும் இதை மறுக்கிறது.

உடன்படிக்கையில் இருந்த நிபந்தனை என்னவென்றால், மக்காவைச் சார்ந்த ஒரு முஸ்லிம் தப்பித்து மதீனா வந்து விட்டால் பெருமானார் (ஸல்) அவர்கள் அவரை திருப்பி அனுப்பி வைத்து விடுவார்கள் என்பதாகும். இது தெளிவாக நிரூபிப்பது என்னவென்றால், இந்த நிபந்தனையின் நோக்கமும், இலக்கும் என்னவாக இருந்ததென்றால், அப்படிப்பட்ட ஒரு நபர் முஸ்லிமாக இருந்தாலும் மதீனாவின் இஸ்லாமிய அரசின் எல்லைக்குள் அவர் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டார். அதாவது கொள்கை ரீதியாக அவர் முஸ்லிமாக இருந்தாலும் பெருமானார்(ஸல்)

அவர்கள் தம் மதீனத்து அரசுக்குள் அவரை இணைக்கக் கூடாது என்பதாகும். ஆகவே அவ்வாறான நபர் உடன்படிக்கையின் நிபந்தனைகளின் கீழ் மதீனாவின் இஸ்லாமிய ஆட்சியை விட்டு வெளியேற்றப்பட்ட பிறகு அவர் எங்கிருந்தாலும் பெருமானார் (ஸல்) அவர்கள் அவருக்கு கட்டளையிட்டு அவரை திரும்பி அனுப்பி வைக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது எவ்வாறு சரியானதாகும்.

பெருமானார் (ஸல்) அவர்கள் அப்படிப்பட்ட ஒரு நபரை மதீனாவில் வைத்துக் கொள்கிறார்கள் என்றால் அன்னார் (ஸல்) மீது ஆட்சேபனை எழ முடியும். உடன்படிக்கையின் அடிப்படையில் ஒருவர் முஸ்லிமாக இருந்தாலும், அவரை பெருமானார் (ஸல்) அவர்கள் தம் அரசாட்சிக்குள் இணைக்கக் கூடாது என்பது நிபந்தனையாகும். ஆகவே அன்னார் அந்த நபரை தம் மதீனத்து ஆட்சியை விட்டு வெளியேற்றி மக்காவாசிகளின் கையில் ஒப்படைத்தார்கள். அவ்வாறிருந்தும் அன்னாரின் மீது ஆட்சேபனை செய்யப்படுகிறது.

அன்னார் (ஸல்) அந்த நபரை தம் ஆட்சியின் கீழ் இணைத்துக் கொண்டு அவருக்கு ஏன் கட்டளையிடவில்லை? என்று அன்னாரின் மீது ஆட்சேபனை செய்யப்படுவது எவ்வளவு பெரிய அநீதியாகும் என்று பாருங்கள்.

ஆகவே அரசியல் ரீதியாக இது எந்த அளவு பலவீனமான, பொருளற்ற ஆட்சேபனை என்றால், எந்தவொரு புத்திசாலி மனிதனும் இதன் பக்கம் கவனம் செலுத்த மாட்டான். உண்மை என்னவென்றால், ஹிஜ்ரத் செய்து வரக் வடிய எந்தவொரு முஸ்லிமுக்கும் மதீனாவுக்குள் புகலிடம் தரக் கூடாது என்று காஃபிர்கள் சார்பாக உடன்படிக்கையில் இணைக்கப்பட்ட இந்த அறிவற்ற நிபந்தனையை இறைவன் அவர்களுக்கே தண்டனையாக ஆக்கி அவர்களைப் பார்த்து, எம்முடைய தூதரோ எந்நிலையிலும் உடன்படிக்கையை பேணி வந்தார். ஆனால், நீங்கள் உங்களது வழியிலேயே முற்களை வைத்து விட்டீர்கள். உங்களால் உருவாக்கப்பட்ட ஆயுதங்களைக் கொண்டே உங்களுடைய கைகளை வெட்டிக் கொண்டுள்ளீர்கள் என்று இறைவன் கூறினான். மக்காவில் இருந்து எந்தவோர் இளைஞரும் முஸ்லிமாகி மதீனாவுக்கு சென்றால் அவரை பெருமானார் (ஸல்) அவர்கள் மதீனாவுக்குள் வைக்கக் கூடாது. அவர் மதீனாவின் அரசாட்சியை விட்டு வெளியேற்றப்பட்டவராக கருதப்பட வேண்டும் என்று நீங்கள்தான் கூறினீர்கள். இப்பொழுது அதே நாவைக் கொண்டு மதீனத்து அரசாட்சியை விட்டு வெளியேற்றப்பட்ட அந்த மக்கள் எங்கிருந்தாலும் அவர்களுக்கு பெருமானார் (ஸல்) அவர்கள் கட்டளையிட்டு அவர்கள் மீது தம் அரசாட்சியை நிலைபெறச் செய்து அவர்களை மக்காவுக்கு கொண்டு சேர்க்க வேண்டும் என்று நீங்கள் கூறுவது முற்றிலும் அறிவீனமான விஷயமாக உள்ளது. பெருமானார் (ஸல்) அவர்கள் அவ்வாறான நபர்களின் ஆன்மாக்கள் மீதும், அவர்களின் மறுமை சம்பந்தப்பட்ட விவகாரங்கள் மீதும் சந்தேகத்திற்கிடமின்றி ஆட்சியாளராக இருந்தார்கள். ஆனால் அவர்களின் அரசியல் அமைப்பு மற்றும் அவர்களின் உலக விவகாரங்களில் கண்காணிப்பாளராக இருக்கவில்லை. ஆன்மிக ரீதியாக அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் பைஅத்தில் இணைந்து முஸ்லிமாகி, நம்பிக்கை கொண்டவர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். ஆனால், அரசியல் ரீதியாக அவர்கள் உங்களை சார்ந்தவர்கள் கிடையாது என்று அந்த காஃபிர்கள்தான் நிபந்தனை வகுத்தார்கள். அதை அன்னாரும் சரி என்று ஏற்றுக் கொண்டார்கள். (காஃபிர்களே!) நீங்களே அந்த மக்களை பெருமானார் (ஸல்) அவர்களின் அரசாட்சியை விட்டு வெளியேற்றி விட்டீர்கள். பிறகு அன்னாரின் மீது ஆட்சேபனை செய்வதற்கு இதில் என்ன உள்ளது?

எவ்வாறு இருப்பினும், இது மக்கத்துக் குறைஷியர்களின் சூழ்ச்சியாக இருந்தது. அது அவர்களின் பக்கமே திரும்பியது. பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்வு எந்நிலையிலும் தூயதாக இருந்தது. தூயதாக இருக்கிறது. உடன்படிக்கையின் சொற்களையும் அன்னார் (ஸல்) நிறைவேற்றினார்கள். அபூ பஸீர் அவர்களை மக்காவாசிகளின் வசம் ஒப்படைத்தவாறு அவரை மதீனாவை விட்டு வெளியேற்றி விட்டார்கள். அதேபோன்று அந்த உடன்படிக்கையின் நிபந்தனையினுடைய அசல் நோக்கமாக இருந்த அந்த ஆன்மாவையும் நிறைவேற்றினார்கள். அபூ பஸீர் மற்றும் அவர்களின் தோழர்களை தம் அரசாட்சியின் வட்டத்தை விட்டு வெளியே வைத்து விட்டார்கள். ஆகவே எல்லா வகையிலும் அன்னார் (ஸல்) உண்மையாளர்களாக இருந்தார்கள். மக்கத்துக் காஃபிர்கள் தாம் விரித்த வலையில் தாமே சிக்கிக் கொண்டார்கள். இறுதியில் அவர்கள் இழிவடைந்து அன்னாரிடம் வந்து, நாங்கள் இந்த நிபந்தனையை ஒப்பந்தத்தில் இருந்து நீக்கி விடுகிறோம் என்று கூறினார்கள்.

وَيْلُ اُمِّهٖ مُسْعِرُ حَرْبٍ لَوْ كَانَ لَهٗ اَحَدٌ

பொருள்: அவருடைய தாய்க்கு கேடு உண்டாகுவதாக! இவரோ போர் நெருப்பை தூண்டுகிறார். இவருக்கு யாராவது புரிய வைத்தால் நன்றாக இருக்குமே!என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறிய சொற்களில் அபூ பஸீருக்கு சூசகமாக அன்னார் (ஸல்) கட்டளையிட்டார்கள் என்று யாராவது கூறுவார் என்றால், அதாவது அந்த சொற்களில் அபூ பஸீரிடம் சூசகமாக நீங்கள் தனியாக குழுவை உருவாக்கிக் கொண்டு குறைஷியர்களுடன் போரை ஆரம்பித்துக் கொள்ளுங்கள் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள் என்றும் ஆட்சேபனை செய்யப்படுகின்றது. இது முற்றிலும் அநீதியும், அசுத்தமான சிந்தனையும் ஆகும். இந்த சொற்களோ பெருமானார் (ஸல்) அவர்களின் உண்மைக்கு சான்றாகவும், அவசியமற்ற போரைக் கண்டு அன்னார் (ஸல்) வெறுப்படைந்ததற்கு சான்றாகவும் உள்ளது. இவர் போரைத் தூண்டி விட நினைக்கிறாரா? என்ன என்றுதான் அன்னார் (ஸல்) கூறினார்கள். நீங்கள் போரை தூண்டி விடுங்கள் என்று அவருக்கு சூசகமாக கூறவில்லை. அபூ பஸீரின் நடவடிக்கையில் இருந்து அன்னார் (ஸல்) முற்றிலும் நிரபராதியாகவும், அவருடைய செயலைக் கண்டு விருப்பமின்மையை வெளிப்படுத்தியவராகவும் இருந்தார்கள் என்பதையே இவை நிரூபிக்கின்றன. அதுவல்லாமல் மறைவாக சூசகமாக அவரை ஒருபோதும் அன்னார் (ஸல்) தூண்டவில்லை.

பெருமானார் (ஸல்) அவர்கள் அபூ பஸீர்-ஐ பார்த்து இறுதியாக கூறிய சொற்களில் لَوْ كَانَ لَهٗ اَحَدٌ என்று கூறினார்கள்.

அதன் பொருள், அவருக்கு ஏதேனும் ஒரு தோழர் கிடைத்தால் நன்றாகவே இருக்குமே என்பதாகும். இதிலிருந்து பெருமானார் (ஸல்) அவர்களின் நோக்கம் அபூ பஸீருக்கு ஏதாவது ஒரு கூட்டாளி கிடைத்தால் அவர் போரின் நெருப்பை தூண்ட முடியும் என்பதாக இருந்தது என்றும், அந்த கூற்றில் போரை தூண்டி விடுவதன் பக்கம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது என்று சர் வில்லியம் முயர் கருதுவது போன்று யாராவது கருதினால் அதற்கான பதில் என்னவென்றால், முதல் விஷயம் நாம் வரலாற்று ரீதியாக எந்த பொருளை கொடுத்தோமோ அது அரபி வாக்கியத்திற்கு முற்றிலும் பொருத்தமானதாகும். இதற்கான உதாரணங்கள் ஹதீஸிலும் அதிக அளவில் காணக் கிடைக்கின்றன. அது மட்டுமின்றி சர் வில்லியம் முயர் எந்த பொருளை கொடுக்கிறாரோ அந்த பொருளை (ஒரு வாதத்திற்காக) நாம் ஏற்றுக் கொண்டாலும், வாக்கியத்தின் முன்பின் உள்ள சொற்றொடர்களை கருத்தில் கொண்டு பார்க்கும் போது அதற்கான பொருள் எவ்வாறு அமைய வேண்டும்? என்றால் அபூ பஸீருக்கு அவருடைய சிந்தனைக்கு ஒத்த தோழர் கிடைத்து விட்டால் அவர் போர் நெருப்பை தூண்டி விட்டு விடுவாரே. ஆனால், மதீனாவில் அவ்வாறான தோழர் எவரும் கிடையாது. இறைவனுக்கு நன்றி. என்பதே அதன் பொருள் ஆகும். அவருக்கு உதவி செய்யக் கூடிய வகையில் அவருடைய சிந்தனையை ஒத்த எவரும் நம்மிடம் இல்லை. அது நல்லதே என்பதுதான் அதனுடைய பொருளாகும்.

ஆகவே பெருமானார் (ஸல்) அவர்களின் நோக்கம் அபூ பஸீருக்கு கண்டனம் தெரிவிப்பதாக இருந்ததேயன்றி, போரை தூண்டுவதாக இருக்கவில்லை என்பதற்கு அந்த சொற்றொடரின் முன்பின் சொற்களும் அதனுடைய ஆரம்ப வரிகளும் அதற்கு போதுமான சான்றாக இருக்கின்றன. இன்ன நபருடைய தாய்க்கு கேடு உண்டாகட்டும். அந்த நபரோ போரின் நெருப்பை தூண்டுகிறாரே என்று தம் கூற்றை கோபத்துடனும், கண்டனத்துடனும் ஆரம்பிக்கின்ற ஒருவர் அதற்குப் பிறகு, எல்லாம் சரிதான்; நீங்கள் போர் நெருப்பை தூண்டிவிட்டுக் கொள்ளுங்கள் என்ற சொற்களை கூறுவாரா என்ன? ஆட்சேபனை செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தில் அறிவை கை நழுவ விட்டு விடக் கூடாது. மேற்கத்திய வரலாற்றாசிரியர்கள் படித்தவர்களாக இருப்பதாக வெளிப்படையில் தம்மை கூறிக் கொள்கின்றனர். ஆனால், பெருமானார் (ஸல்) அவர்களைப் பற்றி பேச்சு வரும்போது, இஸ்லாத்தின் வரலாற்றை பற்றிய பேச்சு வரும்போது அறிவீனமான பேச்சுக்களை பேச ஆரம்பித்து விடுகிறார்கள். இவை அனைத்தையும் விட மிகப் பெரும் விஷயம் என்னவென்றால்,

இதன் தொடர்ச்சி 8-ம் பக்கம்...

MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL MERCHANT
Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

# ஜுமுஆ பேருரை

**ஸரிய்யா குர்தாஃ எனும் போரின் நிலைமைகள் மற்றும் சம்பவங்களைக் குறித்த விளக்கமான உரை**

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றிலிருந்து இன்று ஒரு ஸரிய்யாவைப் பற்றி நான் குறிப்பிடுவேன். அது ஸரிய்யா குர்தாஃ என்றழைக்கப்படுகின்றது. இந்த ஸரிய்யா ஹிஜ்ரீ ஆறாம் ஆண்டு முஹர்ரம் பத்து அன்று நிகழ்ந்தது. மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் முஹம்மத் பின் மஸ்லமா (ரலி) அவர்களை 30 சவாரிகளுடன் குர்தாஃவை நோக்கி அனுப்பி வைத்தார்கள்

எதிரி சமுதாயம் மதீனாவின் மீது தாக்குதல் தொடுப்பதற்கு திட்டம் வகுத்துக் கொண்டிருந்தது என்ற விளக்கம் கூறப்பட்டு விட்டது. அதனை தடுப்பதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சிறுபடையை அங்கு அனுப்பி வைத்தார்கள். மேலும், அங்கும் கூட பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எந்த துன்பமும் கொடுக்கப்படவில்லை; இந்த மென்மை அங்கு காட்டப்பட்டது

ஸரிய்யா குர்தாஃவில் இருந்து திரும்பி வரும்போது, ஸுமாமஃ பின் உஸால் கைது செய்யப்பட்ட சம்பவம் நிகழ்ந்தது. இந்த நபர் யமாமாவில் வசிக்கக் கூடியவராக இருந்தார். மேலும், பனூ ஹனீஃபா கோத்திரத்தின் செல்வாக்கு மிக்க ஒரு தலைவராக இருந்தார். இஸ்லாத்தின் மீதான பகைமையில் எந்த அளவுக்கு அவர் முன்னேறி இருந்தார் என்றால், எப்போதும் அப்பாவி முஸ்லிம்களை கொலை செய்வதற்கு ஆயத்தமாக இருந்து வந்தார்

மஸ்ஜித் நபவியின் வளாகத்திலேயே ஒரு தூணில் கட்டி கைதியாக வைக்கும்படி அன்னார் (ஸல்) ஸஹாபிகளுக்கு கட்டளை வழங்கினார்கள். அதன் மூலம் அன்னாருடைய சபை மற்றும் முஸ்லிம்களின் தொழுகைகள் போன்றவை ஸுமாமஃவின் கண்களுக்கு முன்னால் நிகழ வேண்டும்; மேலும் அவருடைய உள்ளம் இந்த ஆன்மிகக் காட்சிகளால் தாக்கத்திற்குள்ளாகி இஸ்லாத்தின் பக்கம் சாய்ந்து விட வேண்டும் என்பது அன்னாருடைய நோக்கமாக இருந்தது

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 13 டிசம்பர் 2024** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1403 ஆண்டு **ஃபத்ஹ்** மாதம் **13ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**


اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ۝
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றிலிருந்து இன்று ஒரு ஸரிய்யாவைப் பற்றி நான் குறிப்பிடுவேன். அது ஸரிய்யா குர்தாஃ என்றழைக்கப்படுகின்றது. இந்த ஸரிய்யா ஹிஜ்ரீ ஆறாம் ஆண்டு முஹர்ரம் பத்து அன்று நிகழ்ந்தது. மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் முஹம்மத் பின் மஸ்லமா (ரலி) அவர்களை 30 சவாரிகளுடன் குர்தாஃவை நோக்கி அனுப்பி வைத்தார்கள்.

குர்தாஃ, பனூ பக்ர் பின் கிலாப் கோத்திரத்தின் ஒரு கிளையாக இருந்தது. அக்கோத்திரத்தார் ழரிய்யாவின் சுற்றுப்புறத்தில் பக்ராத் எனும் பெயர் கொண்ட இடத்தில் வசித்து வந்தனர். பக்ராத் என்ற இடம் மதீனாவிலிருந்து ஏழு இரவு பயணத் தொலைவில் அமைந்திருந்தது. மேலும் ழரிய்யா பனூ கிலாபுடைய ஒரு புராதன ஊராக இருந்தது. இதுவும் பழைய வரலாற்று நூல்களில் இருந்து கிடைக்கின்ற அறிவிப்புகளுக்கு ஏற்ப மதீனாவில் இருந்து ஏழு இரவுகள் பயணத் தொலைவில் அமைந்திருந்தது. இன்றைய நாட்களிலோ பயணத் தொலைவு மிகவும் குறைந்திருக்கும். ழரிய்யா மதீனாவில் இருந்து ஒன்று அல்லது இரண்டு இரவு பயணத் தொலைவில் இருந்தது என்றும் ஓர் அறிவிப்பில் உள்ளது.

(அத்தப்காத்துல் குப்ரா லி இப்னி ஸஅத், தொகுதி 2, பக்கம் 60, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

அந்த முப்பது ஸஹாபிகளில் ஹஸ்ரத் அப்பாத் பின் பிஷ்ர் (ரலி), ஹஸ்ரத் ஸலமா பின் ஸலாமாஃ (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஹாரிஸ் பின் கஸ்மாஃ (ரலி) ஆகியோரும் பங்கு பெற்றிருந்தனர். இறைத் தூதர் (ஸல்) அவர்கள் அந்த ஜமாஅத்திற்கு இரவில் பயணப்படுவதற்கும், பகலில் மறைந்திருப்பதற்கும் அவர்கள் மீது திடீரென தாக்குதல் தொடுப்பதற்கும் கட்டளை வழங்கியிருந்தார்கள். ஹஸ்ரத் முஹம்மத் பின் மஸ்லமா (ரலி) அவர்கள் தமது ஒரு தோழரை, அவர்கள் எந்த மக்கள்? என்று அவர்களிடம் கேட்டறிவதற்காக அனுப்பி வைத்தார்கள். அவர் சென்றார்; மேலும், அவர்கள் முஹாரிப் கோத்திரத்தின் மக்கள் ஆவர் என்று திரும்பி வந்து கூறினார். அவர்கள் அருகிலேயே முகாமிட்டிருந்தார்கள். மேலும் தமது கால்நடைகளை மேய்வதற்காக விட்டிருந்தார்கள். எந்த அளவிற்கு என்றால், அவர்களின் விலங்குகள் தண்ணீருக்கு அருகில் சென்று அமரும் வரை முஸ்லிம்கள் அவர்களுக்கு காலக்கெடு வழங்கினார்கள். மேலும் முஸ்லிம்கள் அந்நிலையில் அவர்கள் மீது தாக்குதல் தொடுத்து விட்டனர். அவர்களில் சிலரை கொன்றுவிட்டார்கள். எஞ்சியவர்கள் அனைவரும் தப்பி ஓடிவிட்டனர். அவர்கள் பின்தொடரப்படவில்லை. ஸஹாபிகள் ஒட்டகங்களையும், ஆடுகளையும் ஓட்டிக் கொண்டு வந்தனர்; மேலும் பெண்களை எதுவும் கூறவில்லை. பின்னர் அங்கிருந்து சென்று விட்டனர். எந்த இடத்திலிருந்து பனூ பக்ர் கோத்திரத்தை பார்க்க முடிந்ததோ அந்த இடத்தை அடைந்தபோது, ஹஸ்ரத் முஹம்மத் பின் மஸ்லமா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஆபிஸ் பின் புஸ்ர் (ரலி) அவர்களை பனூ பக்ர் கோத்திரத்தின் பக்கம் நிலைமைகளை அறிந்து வருவதற்காக அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் ஆபிஸ் (ரலி) அவர்கள் திரும்பி வந்து ஹஸ்ரத் முஹம்மத் பின் மஸ்லமா (ரலி) அவர்களுக்கு நிலைமைகளை தெரியப்படுத்தினார்கள். பின்னர் ஹஸ்ரத் முஹம்மத் பின் மஸ்லமா (ரலி) அவர்கள் தமது தோழர்களுடன் புறப்பட்டார்கள். மேலும் பனூ பக்ர் கோத்திரத்தின் மீது தாக்குதல் தொடுத்தனர். அவர்களில் பத்து நபர்களை கொன்று விட்டனர்; மேலும் ஒட்டகங்கள் மற்றும் ஆடுகளை ஓட்டிக் கொண்டு வந்தனர். மேலும், மதீனாவை நோக்கி வேகமாக சென்றார்கள். ஹஸ்ரத் முஹம்மத் பின் மஸ்லமா (ரலி) அவர்கள் தமது சில தோழர்களை ஆடுகளுடன் பின்னால் விட்டு விட்டார்கள். மேலும், ஒட்டகங்களை ஓட்டிக் கொண்டு இறைத் தூதர் (ஸல்) அவர்களிடம் மதீனாவை வந்தடைந்து விட்டனர். அதன் பிறகு ஆடுகளும் வந்தடைந்து விட்டன. இறைத் தூதர் (ஸல்) அவர்கள் அவற்றிலிருந்து கம்ஸ் எனும் ஐந்தில் ஒரு பங்கை எடுத்து வைத்தார்கள். மற்றவற்றை ஹஸ்ரத் முஹம்மத் பின் மஸ்லமா (ரலி) அவர்களின் தோழர்களுக்கு மத்தியில் பங்கிட்டு கொடுத்து விட்டார்கள். ஓர் ஒட்டகம் பத்து ஆடுகளுக்கு


A. SAMSUL ALAM
A. ABDUL RAHIM

Dealers of Natural Precious & Semi-Precious Gemstones
TOONICE
DEALERS OF PRECIOUS & SEMI PRECIOUS GEMSTONES
No. 100/59-A, 1st Floor, South Thaikkat Street Melapalayam, Tirunelveli-627005 Tamil Nadu, India
+91 9659389953 toonicegems@gmail.com
Al-Nida GEMS
No. 1/83, 1st Floor Village Road Balaji Nagar Extension Puzhuthivakkam, Chennai-600091 Tamil Nadu, India
+91 9042150339 alnidagems@gmail.com
HG GEMS
HANIYAHANA GEMS CO., LTD.
No. 191/16, Soi Puttha Osot Siphraya, Bangrak Bangkok - 10500 Thailand
+66 638751327 gemscertify22@gmail.com

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly BADAR Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 10 Thursday 16 - 23 Jan 2025 Issue No.3 & 4

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

சமமாக வைக்கப்பட்டது.

(ஸூபுலுல் ஹூதா வர் ரஷாத் தொகுதி 6, பக்கம் 71, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

இந்த முழு அறிவிப்பும் வரலாற்றின் ஒரு நூலில் இடம் பெற்றுள்ளது. ஏனெனில் விளக்கம் இல்லை. எனவே அத்துனை பெரிய அநீதி நிகழ்ந்துள்ளது என்று தெரிய வருகின்றது. பின்னர் அதன் விளக்கமும் வந்து விடும். மொத்தம் 150 ஒட்டகங்களும், மூவாயிரம் ஆடுகளும் இருந்தன.

(அத்தப்காத்துல் குப்ரா லி இப்னி ஸஅத், தொகுதி 2, பக்கம் 60, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

இந்த போர் திட்டத்திற்காக ஹஸ்ரத் முஹம்மத் பின் மஸ்லமா (ரலி) அவர்கள் 19 இரவுகள் மதீனாவிற்கு வெளியே தங்கியிருந்தார்கள். மேலும் முஹர்ரம் 29, ஹிஜ்ரீ 6 அன்று மதீனாவிற்கு திரும்பி வந்து விட்டார்கள்.

(ஸூபுலுல் ஹூதா வர் ரஷ்ஷாத், தொகுதி 6, பக்கம் 71, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத்)

இதன் விளக்கம் தொடர்பாக வரலாற்றின் பல்வேறு நூல்களில் இருந்து ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் எழுதியுள்ள கருத்துகள் இவ்வாறாகும்; தற்போது ஹிஜ்ரி 6 துவங்கிதான் இருந்தது. மேலும் கமரீ வருடத்தின் முதல் மாதம் அதாவது முஹர்ரத்தின் துவக்க நாட்களாக இருந்தன. அப்போது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு நஜத் வாசிகளின் தரப்பிலிருந்து ஆபத்து ஏற்பட்டிருப்பதாக தகவல் கிடைத்தது. இந்த அபாயம் என்பது குர்தாஃ எனும் பனூ பக்ர் கோத்திரத்தின் ஒரு கிளைக் கோத்திரத்தின் தரப்பிலிருந்து அமைந்திருந்தது. மேலும் நஜத் பகுதியில் ழரிய்யா என்ற இடத்தில் அந்தக் கோத்திரத்தினர் வசித்து வந்தனர். அந்த இடம் மதீனாவில் இருந்து ஏழு நாட்கள் பயணத் தொலைவில் அமைந்திருந்தது. இந்த தகவல் கிடைத்ததும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உடனடியாக 30 சவாரிகளைக் கொண்ட ஒரு சிறு படையை முஹம்மத் பின் மஸ்லமா அன்ஸாரீ என்ற ஒரு ஸஹாபியின் தலைமையில் நஜதை நோக்கி அனுப்பி வைத்தார்கள். ஆனால், மேலான அல்லாஹ் நிராகரிப்பாளர்களின் உள்ளத்தில் எப்படிப்பட்ட சில அச்சத்தை ஏற்படுத்திவிட்டான். அவர்கள் சாதாரணமான எதிர்ப்பிற்குப் பிறகு உடனடியாக தப்பியோடி விட்டனர். மேலும் அக்காலத்தின் போர் வழிமுறைக்கேற்ப முஸ்லிம்களுக்கு இந்த வாய்ப்பு இருந்தது. அதாவது அவர்கள் எதிரிகளின் பெண்கள் மற்றும் குழந்தைகளை சிறைபிடித்துக் கொள்வதற்கான வாய்ப்பு இருந்தது. ஏனெனில், எதிரி அவர்களை விட்டு விட்டு தப்பியோடி விட்டான். ஆனால், முஹம்மத் பின் மஸ்லமா (ரலி) அவர்கள் பெண்கள் மற்றும் குழந்தைகளை பொருட்படுத்தவில்லை. மேலும் ஒட்டகங்கள் மற்றும் ஆடுகளை உள்ளடக்கிய பொதுவான போர் செல்வங்களை மட்டும் எடுத்துக் கொண்டு மதீனாவை நோக்கி அவர்கள் திரும்பி வந்து விட்டனர். (ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் எம்.ஏ (ரலி) அவர்கள் எழுதிய நூல் - ஸீரத் காத்தமுன் நபிய்யீன், பக்கம் 662- 663)

எதிரி சமுதாயம் மதீனாவின் மீது தாக்குதல் தொடுப்பதற்கு திட்டம் வகுத்துக் கொண்டிருந்தது என்ற விளக்கம் கூறப்பட்டு விட்டது. அதனை தடுப்பதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சிறுபடையை அங்கு அனுப்பி வைத்தார்கள். மேலும், அங்கும் கூட பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எந்த துன்பமும் கொடுக்கப்படவில்லை; இந்த மென்மை அங்கு காட்டப்பட்டது.

இந்த சந்தர்ப்பத்தில் ஸுமாமஃ பின் உஸால் என்பவர் கைதியாக ஆகுவது மற்றும் அவர் இஸ்லாத்தை ஒப்புக் கொள்வது தொடர்பான குறிப்பும் கிடைக்கின்றது. ஸரிய்யா குர்தாஃவிலிருந்து திரும்பி வரும்போது ஸுமாமஃ பின் உஸால் கைதி ஆக்கப்பட்ட சம்பவம் நிகழ்ந்தது. இதன் விளக்கத்தில் ஸீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: அதாவது இந்தப் போரில் அதாவது ஸரிய்யா குர்தாஃவில் இருந்து திரும்பி வரும்போது, ஸுமாமஃ பின் உஸால் கைது செய்யப்பட்ட சம்பவம் நிகழ்ந்தது. இந்த நபர் யமாமாவில் வசிக்கக் கூடியவராக இருந்தார். மேலும், பனூ ஹனீஃபா கோத்திரத்தின் செல்வாக்கு மிக்க ஒரு தலைவராக இருந்தார். இஸ்லாத்தின் மீதான பகைமையில் எந்த அளவுக்கு அவர் முன்னேறி இருந்தார் என்றால், எப்போதும் அப்பாவி முஸ்லிம்களை கொலை செய்வதற்கு ஆயத்தமாக இருந்து வந்தார். ஆக, ஒருமுறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூதுவர் ஒருவர் அவருடைய பகுதிக்கு சென்றார். அப்போது அவர் அனைத்து (போர்) சட்டங்களையும் புறந்தள்ளிவிட்டு அவரை கொலை செய்வதற்கு சதித் திட்டம் தீட்டினார். இன்னும் கூறப்போனால், ஒருமுறை அவர் சுயமே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கொலை செய்வதற்கும் கூட எண்ணம் கொண்டார். முஹம்மத் பின் மஸ்லமா (ரலி) அவர்களின் குழுவினர் ஸுமாமஃவை கைது செய்து கொண்டு வந்தபோது, இந்த நபர் யார்? என்று அவர்கள் அறிந்திருக்கவில்லை. இன்னும் கூறப்போனால், அவர்கள் அவரை ஒரு சந்தேகத்தின் அடிப்படையில் மட்டுமே கைது செய்திருந்தனர். மேலும், ஸுமாமஃவும் மிகவும் புத்திசாலித்தனத்துடன் தனது உண்மைத்துவத்தை அவர்களிடம் வெளிப்படுத்தாமல் இருந்தான் என்றும் தெரிய வருகின்றது. ஏனெனில், தான் இஸ்லாத்திற்கு எதிராக கடும் குற்றங்களை இழைத்திருக்கின்றேன்; இஸ்லாத்தின் தன்மானம் மிக்க இந்த போர் வீரர்களுக்கு தான் யார் என்பது தெரிந்து விட்டால் அவர்கள் அநேகமாக தன் மீது கடுமை காட்டுவார்கள் அல்லது கொலை கூட செய்து விடுவார்கள் என்பதை அவர் அறிந்திருந்தார்.


இவர் சுயமே எப்படிப்பட்ட ஏராளமான வேலைகளை செய்திருந்தார் என்றால் அதனால் முஸ்லிம்களுக்கு பாதிப்பு ஏற்பட்டிருந்தது. ஆயினும், தன்னுடன் அழகிய முறையில் நடந்து கொள்ளப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பை அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வைத்திருந்தார். நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வரை சென்றடைந்து விட்டால் பின்னர் அவர்கள் அங்கு தன்னுடன் அழகிய முறையில் நடந்து கொள்வார்கள் என்பது அவரது எண்ணமாக இருந்தது. ஆக, மதீனா திரும்பும் வரை ஸுமாமஃவின் உண்மைத்துவம் முஹம்மத் பின் மஸ்லமாவின் குழுவினருக்கு மறைவாக இருந்தது.

மதீனா சென்றடைந்த பிறகு ஸுமாமஃ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்னால் நிறுத்தப்பட்டார். அப்போது, அன்னார் (ஸல்) அவரைப் பார்த்துமே அடையாளம் கண்டு கொண்டு விட்டார்கள். மேலும், முஹம்மத் பின் மஸ்லமா மற்றும் அன்னாருடைய தோழர்களிடம் கூறினார்கள்: இவர் யார்? என்று நீங்கள் அறிவீர்களா? அவர்கள் அறியோம் என்று கூறினார்கள். அப்போது, அன்னார் (ஸல்), அந்த மக்களிடம் உண்மையை தெளிவுபடுத்தினார்கள். அதன் பிறகு அன்னார் (ஸல்) ஸுமாமஃ உடன் அழகிய முறையில் நடந்து கொள்வதற்கான கட்டளையை வழங்கினார்கள். பின்னர் வீட்டினுள் சென்று வீட்டில் உண்பதற்கு என்னவெல்லாம் உள்ளதோ அதனை ஸுமாமஃவிற்காக வெளியே அனுப்பிக் கொடுங்கள் என்று கட்டளையிட்டார்கள். அத்துடன், ஸுமாமஃவை வேறொரு வீட்டில் வைப்பதற்கு பகரமாக மஸ்ஜித்

இதன் தொடர்ச்சி 8-ம் பக்கம்...

National Watch Company
Sales & Service

B. Mohamed Adil
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172
O.A.N. Doors & Steels
V.A. SAIT
99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad